# பத்தாம் வகுப்பு கணிதம்
# சூத்திரங்கள்

**அலகு1.உறவுகளும் சார்புகளும்**

**கார்ட்டீசியன் பெருக்கலின் சேர்ப்புப் பண்பு மீதான பங்கீட்டுப் பண்பு :**

$$(A\ X\ (B \cup C) = (A\ X\ B)\ \cup (A\ X\ C)$$

**கார்ட்டீசியன் பெருக்கலின் சேர்ப்புப் பண்பு மீதான பங்கீட்டுப் பண்பு :**

$$(A\ X\ (B\ \cap C) = (A\ X\ B)\ \cap (A\ X\ C)$$

$f$ , $g$ ஆகியவை ஏதேனும் இரு சார்புகள் எனில், பொதுவாக $f\ o\ g \neq g\ o\ f$.
(சார்புகளின் சேர்ப்பானது பொதுவாக பரிமாற்று விதியைப் பூர்த்தி செய்வதில்லை)

$f$ , $g$ மற்றும் $h$ ஆகியவை ஏதேனும் மூன்று சார்புகள் எனில், பொதுவாக $f\ o\ (g\ o\ h) = (f\ o\ g)\ o\ h$.
(அதாவது மூன்று சார்புகளின் சேர்ப்பானது எப்பொழுதும் சேர்ப்பு விதியைப் பூர்த்தி செய்யும்.)

---

**அலகு – 2 : மெய்யெண்களின் தொடர்வரிசைகளும் தொடர்களும்**

- **யூக்ளிடின் வகுத்தல் துணைத் தேற்றம்**

  $a$ மற்றும் $b$ என்பன இரு மிகை முழுக்கள் எனில், $a = bq + r, 0 \leq r < |b|$ என்றவாறு $q$ , $r$ எனும் தனித்த மிகை முழுக்கள் கிடைக்கும்.

- **அடிப்படை எண்ணியல் தேற்றம்**

  எல்லாப் பகு எண்களும் தனித்த பகா எண்களின் பெருக்கற்பலனாகக் காரணிப்படுத்த இயலும், பகா எண்களின் வரிசை மாறலாம்.

- **கூட்டுத்தொடர் வரிசை (A.P)**

  (i) பொது வடிவம் : $a, a+d, a+2d, a+3d, \ldots \ldots \ldots$

  (ii) $n$ – வது உறுப்பு, $t_n = a + (n-1)d$.

  இங்கு $n$ = முதல் உறுப்பு, $d$ = பொது வித்தியாசம் = $t_2 - t_1$

  (iii) உறுப்புகளின் எண்ணிக்கை, $n = \left(\frac{l-a}{d}\right) + 1$. இங்கு $l$ என்பது கடைசி உறுப்பு.

  (iv) அடுத்தடுத்த மூன்று உறுப்புகள் : $a - d$ , $a$ , $a + d$.

  (v) அடுத்தடுத்த நான்கு உறுப்புகள் : $a - 3d$ , $a - d$ , $a + d, a + 3d$.

  (vi) முதல் $n$ உறுப்புகளின் கூடுதல், (i) $S_n = \frac{n}{2}[2a + (n-1)d]$.

  (ii) $S_n = \frac{n}{2}(a + l)$.

அலகு – 3 : இயற்கணிதம்

- **முற்றொருமைகள்.**
  - (i) $(a+b)^2 = a^2 + 2ab + b^2$.
  - (ii) $(a-b)^2 = a^2 - 2ab + b^2$.
  - (iii) $(a+b)(a-b) = a^2 - b^2$.
  - (iv) $a^3 + b^3 = (a+b)(a^2 - ab + b^2)$ , $a^3 + b^3 = (a+b)^3 - 3ab(a+b)$.
  - (v) $a^3 - b^3 = (a-b)(a^2 + ab + b^2)$ , $a^3 - b^3 = (a-b)^3 + 3ab(a-b)$.

- $f(x)$ மற்றும் $g(x)$ என்பன ஏதேனும் இரு பல்லுறுப்புக்கோவைகள் எனில்,
  $f(x)$ x $g(x)$ = மீ.பொ.வ × மீ.பொ.ம.

- **இருபடிச்சமன்பாடுகள்:-**

(i) $ax^2 + bx + c = 0$ என்ற இருபடிச் சமன்பாட்டின் தீர்வு காண உதவும் சூத்திரம்,

$$x = \frac{-b \pm \sqrt{b^2 - 4ac}}{2a}$$

(ii) இருபடிச் சமன்பாட்டின் மூலங்களின் தன்மை, $\Delta = b^2 - 4ac$

| $\Delta = b^2 - 4ac$ | மூலங்களின் தன்மை |
|---|---|
| $\Delta > 0$ | மெய் மற்றும் சமமற்றவை. |
| $\Delta = 0$ | மெய் மற்றும் சமம். |
| $\Delta < 0$ | மெய்யற்றவை அல்லது கற்பனையானவை. |

(iii) $ax^2 + bx + c = 0$ என்ற இருபடிச் சமன்பாட்டின் மூலங்கள் , $\alpha$ மற்றும் $\beta$ எனில்,

(1) மூலங்களின் கூடுதல், $\alpha + \beta = \frac{-b}{a}$

(2) மூலங்களின் பெருக்கற்பலன், $\alpha\beta = \frac{c}{a}$

(iv) $\alpha$ மற்றும் $\beta$ ஆகியவற்றை மூலங்களாகக் கொண்ட ஒரு இருபடிச் சமன்பாட்டின் வடிவம்,

$x^2 -$ (மூலங்களின் கூடுதல்) $x +$ மூலங்களின் பெருக்கற்பலன் = 0.

அதாவது, $x^2 - (\alpha + \beta)x + \alpha\beta = 0$.

(v) **மேலும் சில பயனுள்ள முற்றொருமைகள்:**

(i) $\alpha^2 + \beta^2 = (\alpha + \beta)^2 - 2\alpha\beta$

(ii) $\alpha^3 + \beta^3 = (\alpha + \beta)^3 - 3\alpha\beta(\alpha + \beta)$

(iii) $\alpha - \beta = \sqrt{(\alpha + \beta)^2 - 4\alpha\beta}$

(iv) $\alpha^4 + \beta^4 = (\alpha^2 + \beta^2)^2 - 2\alpha^2\beta^2$

## அலகு - 5 : ஆயத்தொலை வடிவியல்.

- **பிரிவு சூத்திரம்.**

(i) $A(x_1,y_1), B(x_2,y_2)$ என்ற இரு புள்ளிகளுக்கு இடையேயுள்ள தொலைவு,

$$d=\sqrt{(x_2-x_1)^2+(y_2-y_1)^2}$$

(ii) $A(x_1,y_1), B(x_2,y_2)$ என்ற இரு புள்ளிகளை இணைக்கும் கோட்டுத்துண்டை உட்புறமாக $m:n$ என்ற விகிதத்தில் பிரிக்கும் புள்ளி

$$=\left(\frac{mx_2+nx_1}{m+n},\frac{my_2+ny_1}{m+n}\right).$$

(iii) $A(x_1,y_1), B(x_2,y_2)$ என்ற இரு புள்ளிகளை இணைக்கும் கோட்டுத்துண்டை வெளிப்புறமாக $m:n$ என்ற விகிதத்தில் பிரிக்கும் புள்ளி

$$=\left(\frac{mx_2-nx_1}{m-n},\frac{my_2-ny_1}{m-n}\right)$$

(iv) $A(x_1,y_1), B(x_2,y_2)$ என்ற இரு புள்ளிகளை இணைக்கும் கோட்டுத்துண்டின் நடுப்புள்ளி $=\left(\frac{x_1+x_2}{2},\frac{y_1+y_2}{2}\right)$

(v) $A(x_1,y_1), B(x_2,y_2)$ மற்றும் $C(x_3,y_3)$ ஆகிய புள்ளிகளை உச்சிகளாகக் கொண்ட முக்கோணத்தின் நடுக்கோட்டுமையம், $G=\left(\frac{x_1+x_2+x_3}{3},\frac{y_1+y_2+y_3}{3}\right)$

(vi) $A(x_1,y_1), B(x_2,y_2)$ மற்றும் $C(x_3,y_3)$ ஆகிய புள்ளிகளை உச்சிகளாகக் கொண்ட முக்கோணத்தின் பரப்பு, $\Delta=\frac{1}{2}\begin{vmatrix} x_1 & x_2 & x_3 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_1 \end{vmatrix}$

(vii) $A(x_1,y_1), B(x_2,y_2), C(x_3,y_3)$ மற்றும் $6D(x_4,y_4)$ ஆகிய புள்ளிகளை உச்சிகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பு, $\Delta=\frac{1}{2}\begin{vmatrix} x_1 & x_2 & x_3 & x_4 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_4 & y_1 \end{vmatrix}$

(viii) $A(x_1,y_1), B(x_2,y_2)$ மற்றும் $C(x_3,y_3)$ ஆகிய புள்ளிகள் ஒரு கோட்டில் அமைவதற்கான கட்டுப்பாடு, $\begin{vmatrix} x_1 & x_2 & x_3 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_1 \end{vmatrix}=0.$

**ஒரு நேர்க்கோட்டின் சாய்வு.**

(i) ஒரு நேர்க்கோட்டின் சாய்வுக்கோணம் $\theta$ தரப்படும் போது, சாய்வு, $m=tan\theta$.

(ii) ஒரு நேர்க்கோட்டின் மீதுள்ள இரு புள்ளிகள் தரப்படும் போது, சாய்வு,

$$m=\frac{y_2-y_1}{x_2-x_1}$$

(iii) ஒரு நேர்க்கோட்டின் சமன்பாடு $ax+by+c=0$ தரப்படும் போது, சாய்வு, $m=\frac{-a}{b}$

(iv) இரு நேர்க்கோடுகள் ஒன்றுக்கொன்று இணையானவை எனில் அவற்றின் சாய்வுகள் சமம். அதாவது, $m_1 = m_2$

(v) இரு நேர்க்கோடுகள் ஒன்றுக்கொன்று செங்குத்தானவை எனில் அவற்றின் சாய்வுகளின் பெருக்கற்பலன் $-1$ ஆகும். அதாவது, $m_1 \text{x}\, m_2 = -1$

**<u>நேர்க்கோட்டின் சமன்பாடு.</u>**

(i) $x$ - அச்சின் சமன்பாடு, $y = 0$

(ii) $x$ - அச்சுக்கு இணையான நேர்க்கோட்டின் சமன்பாடு, $y = k$

(iii) $y$ - அச்சின் சமன்பாடு, $x = 0$

(iv) $y$ - அச்சுக்கு இணையான நேர்க்கோட்டின் சமன்பாடு, $x = k$

(v) ஆதிப்புள்ளி வழியாகச் செல்லும் நேர்க்கோட்டின் சமன்பாடு : $y = mx$

(vi) சாய்வு - வெட்டுத்துண்டு அமைப்பு : $y = mx + c$

(vii) சாய்வு - புள்ளி அமைப்பு : $y - y_1 = m(x - x_1)$

(viii) இரு புள்ளிகள் அமைப்பு : $\frac{y-y_1}{y_2-y_1} = \frac{x-x_1}{x_2-x_1}$

(ix) வெட்டுத்துண்டுகள் அமைப்பு : $\frac{x}{a} + \frac{y}{b} = 1$

(x) $ax + by + c = 0$ என்ற நேர்க்கோட்டிற்கு இணையான நேர்க்கோட்டின் சமன்பாடு $ax + by + k = 0$ என்ற வடிவில் இருக்கும்.

(xi) $ax + by + c = 0$ என்ற நேர்க்கோட்டிற்கு இணையான நேர்க்கோட்டின் சமன்பாடு $bx - ay + k = 0$ என்ற வடிவில் இருக்கும்.

## <u>அலகு – 6 : முக்கோணவியல்.</u>

- **<u>முக்கோணவியல் விகிதங்கள்</u>**

(1) $sin\theta = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{கர்ணம்}}$

(2) $cos\theta = \frac{\text{அடுத்துள்ள பக்கம்}}{\text{கர்ணம்}}$

(3) $tan\theta = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}}$

- **<u>முக்கோணவியல் அட்டவணை.</u>**

| $\theta$ | $0^\circ$ | $30^\circ$ | $45^\circ$ | $60^\circ$ | $90^\circ$ |
|---|---|---|---|---|---|
| $sin\theta$ | 0 | $\frac{1}{2}$ | $\frac{1}{\sqrt{2}}$ | $\frac{\sqrt{3}}{2}$ | 1 |
| $cos\theta$ | 1 | $\frac{\sqrt{3}}{2}$ | $\frac{1}{\sqrt{2}}$ | $\frac{1}{2}$ | 0 |
| $tan\theta$ | 0 | $\frac{1}{\sqrt{3}}$ | 1 | $\sqrt{3}$ | $\infty$ |

**அலகு – 7 : அளவியல்**

(i)

| வ. எண் | கன உருவம் | வளைபரப்பு | மொத்தப் பரப்பு | கன அளவு |
|---|---|---|---|---|
| 1 | உருளை | $2\pi rh$ | $2\pi r(h+r)$ | $\pi r^2 h$ |
| 2 | கூம்பு | $\pi rl$ | $\pi r(l+r)$ | $\frac{1}{3}\pi r^2 h$ |
| 3 | கோளம் | $4\pi r^2$ | $4\pi r^2$ | $\frac{4}{3}\pi r^3$ |
| 4 | அரைக்கோளம் | $2\pi r^2$ | $3\pi r^2$ | $\frac{2}{3}\pi r^3$ |
| 5 | இடைக்கண்டம் (வாளி) | $\pi l(R+r)$ <br> $l = \sqrt{h^2+(R-r)^2}$ | $\pi l(R+r) +$ <br> $\pi(R^2+r^2)$ | $\frac{\pi h}{3}(R^2+r^2+Rr)$ |
| 6 | உள்ளீடற்ற உருளை | $2\pi(R+r)h$ | $2\pi(R+r)(R-r+)h$ | $\pi h(R^2-r^2)$ |
| 7 | உள்ளீடற்ற கோளம் | $4\pi R^2$ | $4\pi(R^2+r^2)$ | $\frac{4}{3}\pi(R^3-r^3)$ |
| 8 | உள்ளீடற்ற அரைக்கோளம் | $2\pi(R^2+r^2)$ | $\pi(3R^2+r^2)$ | $\frac{2}{3}\pi(R^3-r^3)$ |

(ii) கூம்பின் சாயுயரம், $l = \sqrt{r^2+h^2}$

(iii) கூம்பின் ஆரம், $r = \sqrt{l^2-h^2}$

(iv) கூம்பின் உயரம், $h = \sqrt{l^2-r^2}$

(v) உருக்கி தயாரிக்கப்படும் புதிய கன உருவங்களின் எண்ணிக்கை

$$= \frac{\text{உருக்கப்பட்ட கன உருவத்தின் கன அளவு}}{\text{உருவாக்கப்பட உள்ள ஒரு கன உருவத்தின் கன அளவு}}$$

- **நிகழ்தகவு.**

(i) $A$ என்ற நிகழ்ச்சியின் நிகழ்தகவு, $P(A) = \frac{n(A)}{n(S)}$

(ii) உறுதியாகக் கிடைக்கப்பெறும் நிகழ்ச்சியின் நிகழ்தகவு 1 ஆகும். அதாவது, $P(S) = 1$.

(iii) இயலா நிகழ்ச்சியின் நிகழ்தகவு 0 ஆகும். அதாவது, $P(\emptyset) = 0$.

(iv) நிகழ்தகவின் மதிப்பானது எப்பொழுதும் 0 முதல் 1 வரை மட்டுமே இருக்கும். அதாவது, $0 \le P(A) \le 1$.

(v) ஒரு நிகழ்ச்சி நடக்காமல் இருப்பதற்கான நிகழ்தகவு,

$P(\bar{A}) = 1 - P(A)$ ஆகும்.

## அலகு – 1 : உறவுகளும் சார்புகளும்

2 மதிப்பெண்கள்

### 1.3.கார்டீசியன் பெருக்கல்

**1) பயிற்சி - 1.1 - 1(i)**

$A = \{2, -2, 3\}$ மற்றும் $B = \{1, -4\}$ எனில் $A \, X \, B$, $A \, X \, A$ மற்றும் $B$ X A ஐக் காண்க.

**தீர்வு**:- **தரவு**, $A = \{2, -2,3\}$ மற்றும் $B = \{1, -1\}$

$A \times B = \{2, -2,3\} \times \{1, -1\}$

$= \{(2,1), (2, -1), (-2,1), (-2, -1), (3,1), (3, -1)\}$

$A \times A = \{2, -2,3\} \times \{2, -2,3\}$

$= \{(2,2), (2, -2), (2,3), (-2,2), (-2, -2), (-2,3), (3,2), (3, -2), (3,3)\}$

$B \times A = \{1, -1\} \times \{2, -2,3\}$

$= \{(1,2), (-1,2), (1, -2), (-1, -2), (1,3), (-1,3)\}$

**2) பயிற்சி - 1.1 - 1(ii)**

$A$=$B$={$p$, $q$} எனில் $A$ X $B$, $A$ X $A$ மற்றும் $B$ X A ஐக் காண்க.

**தீர்வு**:- **தரவு**, $A$={$p,q$} , $B$={$p,q$}

$A$x$B$= {$p,q$ } x {$p,q$}

={ $(p,p)$, $(p,q)$, $(q,p)$, $q,q$) }

$A$x$A$= {$p,q$}x {$p,q$}

={ $(p,p)$, $(p,q)$,$(q,p)$,$(q,q)$}

$B$x$A$= {$p,q$} x {$p,q$}

={ $(p,p)$, $(p,q)$, $(q,p)$, $(q,q)$}

**3) பயிற்சி - 1.1 - 1(iii)**

$A = \{m, n\}$ ; $B = \emptyset$ எனில் $A \, X \, B$, $A \, X \, A$ மற்றும் $B$ X A ஐக் காண்க.

**தீர்வு**:- **தரவு**, $A = \{m, \ n\}$ மற்றும் $B = \emptyset = \{ \}$

$A \times B = \{m,n\} \times \{ \}$

$= \{ \}$

$A \times A = \{m,n\} \times \{m,n\}$

$= \{(m,m), (m,n), (n,m), (n,n)\}$

$B \times A = \{ \} \times \{m,n\}$

$= \{ \}$

**4) பயிற்சி - 1.1 (2)**

$A = \{1, 2, 3\}$ மற்றும் $B = \{x \,/\, x$ என்பது 10 - ஐ விடச் சிறிய பகா எண்} எனில், $A \, X \, B$ மற்றும் $B$ X A ஆகியவற்றைக் காண்க.

**தீர்வு**:-

**தரவு,** $A = \{1,2,3\}$ மற்றும் $B = \{2,3,5,7\}$

$A \times B = \{1,2,3\} \times \{2,3,5,7\}$

$= \{(1,2), (1,3), 1,5), (1,7), (2,2), (2,3), (2,5), (2,7), (3,2), (3,3), (3,5), (3,7)\}$

$B \times A = \{2,3,5,7\} \times \{1,2,3\}$

$= \{(2,1), (2,2), (2,3), (3,1), (3,2), (3,3), (5,1), (5,2), (5,3), (7,1), (7,2), (7,3)\}$

**5) எ.கா : 1.2**

$A \, X \, B = \{(3, 2), (3, 4), (5, 2), (5, 4)\}$ எனில் $A$ மற்றும் $B$ - ஐக் காண்க.

**தீர்வு**:-

**தரவு**, $A \times B = \{(3,2), (3,4), (5,2), (5,4)\}$

$\therefore A = \{3,5\}$ மற்றும் $B = \{2,4\}$

**6) பயிற்சி - 1.1 (3)**

$B \, X \, A = \{(-2, 3), (-2, 4), (0, 3), (0, 4), (3, 3), (3, 4)\}$ எனில் $A$ மற்றும் $B$ ஆகியவற்றைக் காண்க.

**தீர்வு**:-

**தரவு**, $B \times A = \{(-2,3), (-2,4), (0,3), (0,4), (3,3), (3,4)\}$

$\therefore A = \{-2,0,3\}$ மற்றும் $B = \{3,4\}$

## 1.4.உறவுகள்

1) **எ.கா : 1.4**

$A = \{3, 4, 7, 8\}$ மற்றும் $B = \{1, 7, 10\}$ எனில் கீழ் உள்ள கணங்களில் எவை $A$ -இருந்து $B$ – க்கு ஆன உறவைக் குறிக்கின்றது?

**(i)** $R_1 = \{(3, 7), (4, 7), (7, 10), (8, 1)\}$

**(ii)** $R_2 = \{(3, 1), (4, 12)\}$

**(iii)** $R_3 = \{(3, 7), (4, 10), (7, 7), (7, 8), (8, 11), (8, 7), (8, 10)\}$

**தீர்வு**:-

**தரவு,** $A = \{3,4,7,8\}$ மற்றும் $B = \{1,7,10\}$

$A \times B = \{3,4,7,8\} \times \{1,7,10\}$

$= \{(3,1), (3,7), (3,10), (4,1), (4,7), (4,10), (7,1), (7,7), (7,10), (8,1), (8,7), (8,10)\}$

(i) $R_1 = \{(3,7), (4,7), (7,10), (8,1)\}$

இங்கு, $R_1 \subseteq A \times B$

$\therefore R_1$ ஆனது $A$ -இருந்து $B$ – க்கு ஆன உறவு ஆகும்.

(ii) $R_2 = \{(3,1), (4,12)\}$

இங்கு, $(4,12) \in R_2$ ஆனால் $(4,12) \notin A \times B$

$\therefore R_2$ ஆனது $A$ -இருந்து $B$ – க்கு ஆன உறவு இல்லை.

(iii) $R_3 = \{(3,7), (4,10), (7,7), (7,8), (8,11), (8,7), (8,10)\}$

இங்கு, $(7,8) \in R_3$ ஆனால் $(7,8) \notin A \times B$

$\therefore R_3$ ஆனது $A$ -இருந்து $B$ – க்கு ஆன உறவு இல்லை.

2) **பயிற்சி - 1.2 (1)**

$A = \{1, 2, 3, 7\}$ மற்றும் $B = \{3, 0, -1, 7\}$ எனில் கீழ் உள்ள கணங்களில் எவை $A$ –லிருந்து $B$ – க்கான உறவுகளாகும்?

**(i)** $R_1 = \{(2, 1), (7, 1)\}$

**(ii)** $R_2 = \{(-1, 1)\}$

**(iii)** $R_3 = \{(2, -1), (7, 7), (1, 3)\}$

**(iv)** $R_4 = \{(7, -1), (0, 3), (3, 3), (0, 7)\}$

**தீர்வு**:-

**தரவு,** $A = \{1,2,3,7\}$ மற்றும் $B = \{3,0,-1,7\}$

$A \times B = \{1,2,3,7\} \times \{3,0,-1,7\}$

$= \{(1,3), (1,0), (1,-1), (1,7), (2,3), (2,0), (2,-1), (2,7), (3,3), (3,0), (3,-1), (3,7), (7,3), (7,0), (7,-1), (7,7)\}$

(i) $R_1 = \{(2,1), (7,1)\}$

இங்கு, $(2,1) \in R_1$ ஆனால் $(2,1) \notin A \times B$

$\therefore R_1$ ஆனது $A$ -இருந்து $B$ – க்கு ஆன உறவு இல்லை.

(ii) $R_2 = \{(-1,1)\}$

இங்கு, $(-1,1) \in R_2$ ஆனால் $(-1,1) \notin A \times B$

$\therefore R_2$ ஆனது $A$ -இருந்து $B$ – க்கு ஆன உறவு இல்லை.

(iii) $R_3 = \{(2,-1), ((7,7), (1,3)\}$

இங்கு, $R_3 \subseteq A \times B$

$\therefore R_3$ ஆனது $A$ -இருந்து $B$ – க்கு ஆன உறவு ஆகும்.

(iv) $R_4 = \{(7,-1), (0,3), (3,3), (0,7)\}$

இங்கு, $(0,3) \in R_3$ ஆனால் $(0,3) \notin A \times B$

$\therefore R_4$ ஆனது $A$ -இருந்து $B$ – க்கு ஆன உறவு இல்லை..

3) **பயிற்சி - 1.2 (3)**

$R$ என்ற உறவு $\{(x, y) / y = x + 3, x \in \{0, 1, 2, 3, 4, 5\}\}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பகத்தையும் வீச்சகத்தையும் காண்க.

**தீர்வு**:-

**தரவு,** $\boldsymbol{R} = \{(x, y) | y = x + 3, x \in \{0,1,2,3,4.5\}\}$

$x = 0$ எனில் $y = 0 + 3 = 3$ $\quad$ $x = 1$ எனில் $y = 1 + 3 = 4$

$x = 2$ எனில் $y = 2 + 3 = 5$ $\quad$ $x = 3$ எனில் $y = 3 + 3 = 6$

$x = 4$ எனில் $y = 4 + 3 = 7$ $\quad$ $x = 5$ எனில் $y = 5 + 3 = 8$

$\therefore R = \{(0,3), (1,4), (2,5), (3,6), (4,7), (5,8)$

இங்கு,$R$ ன் மதிப்பகம் $= \{0,1,2,3,4,5\}$

$R$ ன் வீச்சகம் $= \{3,4,5,6,7,8\}$

4) **எ.கா : 1.5**

படத்தில் காட்டப்பட்டுள்ள அம்புக்குறிப் படமானது $P$ மற்றும் $Q$ கணங்களுக்கான உறவைக் குறிக்கின்றது. இந்த உறவை **(i)** கணக்கட்டமைப்பு முறை **(ii)** பட்டியல் முறைகளில் எழுதுக. **(iii)** $R$ –ன் மதிப்பகம் மற்றும் வீச்சகத்தைக் காண்க.




**தீர்வு**:-

**(i)** **கணக்கட்டமைப்பு முறை**:-

$$R = \{(x,y) / \ y = x - 2, x \in P, y \in Q$$

**(ii)** **பட்டியல் முறை**:-

$$R = \{(5,3),(6,4),(7,5)\}$$

**(iii)** **கணக்கட்டமைப்பு முறை**:-

$R$ –ன் மதிப்பகம் $= \{5,6,7\}$

$R$ –ன் வீச்சகம் $= \{3,4,5\}$

5) **பயிற்சி - 1.2 (5)**

ஒரு நிறுவனத்தில் உதவியாளர்கள் $(A)$, எழுத்தர்கள் $(C)$, மேலாளர்கள் $(M)$ மற்றும் நிர்வாகிகள் $(E)$ ஆகிய நான்கு பிரிவுகளில் பணியாளர்கள் உள்ளனர். $A, C, M$ மற்றும் $E$ பிரிவு பணியாளர்களுக்கு ஊதியங்கள் முறையே ரூ.10,000, ரூ.25,000, ரூ.50,000 மற்றும் ரூ.1,00,000 ஆகும். $A_1$, $A_2, A_3, A_4$ மற்றும் $A_5$ ஆகியோர் உதவியாளர்கள், $C_1$, $C_2, C_3, C_4$ மற்றும் $C_5$ ஆகியோர் எழுத்தாளர்கள் $M_1$, $M_2, M_3, M_4$ மற்றும் $M_5$ ஆகியோர்கள் மேலாளர்கள் மற்றும் $E_1$, $E_2, E_3, E_4$ மற்றும் $E_5$ ஆகியோர் நிர்வாகிகள் ஆவர். $x R y$ என்ற உறவில் $x$ என்பது $y$ என்பவருக்குக் கொடுக்கப்பட்ட ஊதியம் எனில் $R$ - என்ற உறவை, வரிசைச் சோடிகள் மூலமாகவும் அம்புக்குரி படம் மூலமாகவும் குறிப்பிடுக.

**தீர்வு**:-

**தரவு**, ஊதியங்கள் $S = \{10000,25000,50000,100000\}$

பணியாளர்கள் $E = \{A_1, A_2, A_3, A_4, A_5, C_1, C_2, C_3, C_4, M_1, M_2, M_3, E_1, E_2\}$

**வரிசைசோடிகள்:-**

$R = \{(10000, A_1), (10000, A_2), (10000, A_3), (10000, A_4), (10000, A_5), (25000, C_1), (25000, C_2), (25000, C_3), (25000, C_4)(50000, M_1), (50000, M_2), (50000, M_3), (100000, E_1), (100000, E_2)\}$

**அம்புகுறிபடம்:-**



## 2.எண்களும் தொடர் வரிசைகளும்

**எ.கா : 2.6** $396, 504, 636$ ஆகியவற்றின் மீ.பொ.வ காண்க.

**தீர்வு:-**

முதலில் 396 மற்றும் 504 இன் மீ.பொ.வ காண்போம்.

**இங்கு,** $a = 504$ மற்றும் $b = 396$

$504 = 396 \times 1 + 108$ ; மீதி $= 108 \neq 0$

$396 = 108 \times 3 + 72$ ; மீதி $= 72 \neq 0$

$108 = 72 \times 1 + 36$ ; மீதி $= 36 \neq 0$

$72 = 36 \times 2 + 0$

இங்கு, மீதி $= 0$

ஆகவே, 396 மற்றும் 504 – யின் மீ.பொ.வ $= 36$

இப்பொழுது, 636 மற்றும் 36 இன் மீ.பொ.வ காண்போம்.

**இங்கு,** $a = 636$ மற்றும் $b = 36$

$636 = 36 \times 17 + 24$ ; மீதி $= 24 \neq 0$

$36 = 24 \times 1 + 12$ ; மீதி $= 12 \neq 0$

$24 = 12 \times 2 + 0$

இங்கு, மீதி $= 0$

ஆகவே, 636 மற்றும் 36 – யின் மீ.பொ.வ $= 12$

∴ $396, 504$ மற்றும் 636 இன் மீ.பொ.வ $= 12$

### பயிற்சி 2.1

2) ஒரு நபரிடம் 532 பூந்தொட்டிகள் உள்ளன. அவர் வரிசைக்கு 21 பூந்தொட்டிகள் வீதம் அடுக்க விரும்பினார். எத்தனை வரிசைகள் முழுமை பெறும் எனவும் மற்றும் எத்தனை பூந்தொட்டிகல் மீதமிருக்கும் எனவும் காண்க. [PTA-1]

**தீர்வு:-**

**தரவு,** வகுபடும் எண், $a = 532$ மற்றும் வகுத்தி, $b = 21$

**WKT,** யூக்ளிடின் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி,

$$a = bq + r, \quad 0 \leq r < b$$

$$\Rightarrow \quad 532 = 21(25) + 7$$

$\Rightarrow$ ஈவு, $q = 25$ மற்றும் மீதி, $r = 7$

| | 25 |
|---|---|
| 21 | 532 |
| | 42 |
| | 112 |
| | 105 |
| | 7 |

∴ முழுமை பெறும் வரிசைகள் $= 25$

மீதமிருக்கும் பூந்தொட்டிகள் $= 7$

6) யூக்ளிடின் வகுத்தல் வழிமுறையைப் பயன்படுத்திப் பின்வருவனவற்றின் மீ.பொ.வ காண்க.

(i) 340 மற்றும் 412 (ii) 867 மற்றும் 255

(iii) 10224 மற்றும் 9648 (iv) $84, 90$ மற்றும் 120

**தீர்வு:-**

**WKT,** யூக்ளிடின் வகுத்தல் துணைத்தேற்றத்தின் படி,

$$a = bq + r, \quad 0 \leq r < b$$

இங்கு, $a =$ வகுபடும் எண், $b =$ வகுத்தி, $q =$ ஈவு, $r =$ மீதி.

(i) **தரவு,** $a = 412$ மற்றும் $b = 340$

$412 = 340 \times 1 + 72$ ; மீதி $= 72 \neq 0$

$340 = 72 \times 4 + 52$ ; மீதி $= 52 \neq 0$

$72 = 52 \times 1 + 20$ ; மீதி $= 20 \neq 0$

$52 = 20 \times 2 + 12$ ; மீதி $= 12 \neq 0$

$20 = 12 \times 1 + 8$ ; மீதி $= 8 \neq 0$

$12 = 8 \times 1 + 4$ ; மீதி $= 4 \neq 0$

$8 = 4 \times 2 + 0$

இங்கு, மீதி $= 0$

ஆகவே, 340 மற்றும் 412 – யின் மீ.பொ.வ $= 4$.

(ii) **தரவு,** $a = 867$ மற்றும் $b = 255$

$867 = 255 \times 3 + 102$ ; மீதி $= 102 \neq 0$

$255 = 102 \times 2 + 51$ ; மீதி $= 51 \neq 0$

$102 = 51 \times 2 + 0$

இங்கு, மீதி $= 0$

ஆகவே, 867 மற்றும் 255 – யின் மீ.பொ.வ $= 51$.

(iii) **தரவு,** $a = 10224$ மற்றும் $b = 9648$

$10224 = 9648 \times 1 + 576$ ; மீதி $= 576 \neq 0$

$9648 = 576 \times 16 + 432$ ; மீதி $= 432 \neq 0$

$576 = 432 \times 1 + 144$ ; மீதி $= 144 \neq 0$

$432 = 144 \times 3 + 0$

இங்கு, மீதி $= 0$

ஆகவே, 10224 மற்றும் 9648 – யின் மீ.பொ.வ $= 144$.

(iv) முதலில் 84 மற்றும் 90 இன் மீ.பொ.வ காண்போம்.

**இங்கு,** $a = 90$ மற்றும் $b = 84$

$90 = 84 \times 1 + 6$ ; மீதி $= 6 \neq 0$

$84 = 6 \times 14 + 0$

இங்கு, மீதி $= 0$

ஆகவே, 90 மற்றும் 84 – யின் மீ.பொ.வ $= 6$.

## பயிற்சி 2.2

4) $13824 = 2^a \times 3^b$ எனில், $a$ மற்றும் $b$ – யின் மதிப்புக் காண்க.

**தீர்வு:-**

| | |
|---|---|
| 2 | 13824 |
| 2 | 6912 |
| 2 | 3456 |
| 2 | 1728 |
| 2 | 864 |
| 2 | 432 |
| 2 | 216 |
| 2 | 108 |
| 2 | 54 |
| 3 | 27 |
| 3 | 9 |
| 3 | 3 |
| | 1 |

தரவு, $2^a \times 3^b = 13824$

$\Longrightarrow 2^a \times 3^b = 2^9 \times 3^3$

$\therefore$ $a = 9$ மற்றும் $b = 3$

## பயிற்சி 2.4

5) ஒரு தொடர்வரிசையின் பொது உறுப்பு பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது.

$$a_n = \begin{cases} \frac{n^2-1}{n+3} & ; \; n \in \mathbb{N} \text{ ஓர் இரட்டை எண்} \\ \frac{n^2}{2n+1} & ; \; n \in \mathbb{N} \text{ ஓர் ஒற்றை எண்} \end{cases}$$

$a_8$ மற்றும் $a_{15}$ ஐக் காண்க.

**தீர்வு:-**

தரவு, $n$ ஓர் இரட்டை எண் எனில், $a_n = \frac{n^2-1}{n+3}$

$n$ ஓர் ஒற்றை எண் எனில், $a_n = \frac{n^2}{2n+1}$

$$a_8 = \frac{8^2-1}{8+3} = \frac{64-1}{11} = \frac{63}{11}$$

$$a_{15} = \frac{15^2}{2(15)+1} = \frac{225}{30+1} = \frac{225}{31}$$

எ.கா : 2.26 $3, 6, 9, 12, \ldots, 111$ என்ற கூட்டுத்தொடர்வரிசையில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கையைக் காண்க.

**தீர்வு:-**

தரவு, முதல் உறுப்பு $a = 3$

பொது வித்தியாசம் $d = 6 - 3 = 3$

கடைசி உறுப்பு $l = 111$

**WKT**, உறுப்புகளின் எண்ணிக்கை, $n = \left(\frac{l-a}{d}\right) + 1$

$$\therefore \; n = \left(\frac{111-3}{3}\right) + 1$$

$$= \left(\frac{108}{3}\right) + 1$$

$$= 36 + 1$$

$$= 37$$

எனவே, தரப்பட்டுள்ள கூட்டுத்தொடர்வரிசையில் 37 உறுப்புகள் உள்ளன.

எ.கா : 2.10 $a^b \times b^a = 800$ என்றவாறு அமையும் இரு மிகை முழுக்கள் $a$ மற்றும் $b$ ஐக் காண்க.

**தீர்வு:-**

| | |
|---|---|
| 2 | 800 |
| 2 | 400 |
| 2 | 200 |
| 2 | 100 |
| 2 | 50 |
| 5 | 25 |
| 5 | 5 |
| | 1 |

தரவு, $a^b \times b^a = 800$

$= 2 \times 2 \times 2 \times 2 \times 2 \times 5 \times 5$

$a^b \times b^a = 2^5 \times 5^{a2}$

இதிலிருந்து நாம் பெறுவது,

$a = 2, b = 5$ அல்லது $a = 5, b = 2$

பயிற்சி 2.5

5) $16, 11, 6, 1, \ldots$ என்ற கூட்டுத்தொடர்வரிசையில் $-54$ என்பது எத்தனையாவது உறுப்பு?

தீர்வு:-

இங்கு, $a = 16$, $d = 11 - 16 = -5$, $l = -54$

WKT, $n = \left(\frac{l-a}{d}\right) + 1$

$$n = \left(\frac{-54 - 16}{-5}\right) + 1$$
$$= \left(\frac{-70}{-5}\right) + 1$$
$$= 14 + 1$$
$$= 15$$

∴ $-54$ என்பது 15 – வது உறுப்பு ஆகும்.

6) $9, 15, 21, 27, \ldots, 183$ என்ற கூட்டுத்தொடர்வரிசையின் நடு உறுப்புகளைக் காண்க. [PTA-1]

தீர்வு:-

இங்கு, $a = 9$, $d = 15 - 9 = 6$, $l = 183$

WKT, $n = \left(\frac{l-a}{d}\right) + 1$

கூட்டுத்தொடர்வரிசையில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை,

$$n = \left(\frac{183 - 9}{6}\right) + 1$$
$$= \left(\frac{174}{6}\right) + 1$$
$$= 29 + 1$$

$= 30$ , இது ஒரு இரட்டை எண்.

∴ நடு உறுப்பு $= \frac{n}{2}$ - வது உறுப்பு மற்றும் $\left(\frac{n}{2} + 1\right)$ – வது உறுப்பு

$= \frac{30}{2}$ - வது உறுப்பு மற்றும் $\left(\frac{30}{2} + 1\right)$ – வது உறுப்பு

$= 15$ - வது உறுப்பு மற்றும் $(15 + 1)$ – வது உறுப்பு

$= 15$ - வது உறுப்பு மற்றும் 16 – வது உறுப்பு

WKT, $t_n = a + (n-1)d$

| 15 –வது உறுப்பு, | 16 –வது உறுப்பு, |
|---|---|
| $= t_{15}$ | $= t_{16}$ |
| $= a + 14d$ | $= a + 15d$ |
| $= 9 + 14(6)$ | $= 9 + 15(6)$ |
| $= 9 + 84$ | $= 9 + 90$ |
| $= 93$ | $= 99$ |

∴ நடு உறுப்புகள், 93 மற்றும் 99

பயிற்சி 2.5

4) $-11, -15, -19, \ldots$ என்ற கூட்டுத்தொடர்வரிசையின் 19 –வது உறுப்பைக் காண்க. [GMQ]

தீர்வு:-

இங்கு, $a = -11$

$d = -15 - (-11) = -15 + 11 = -4$

$n = 19$

WKT, $t_n = a + (n-1)d$

∴ 19 –வது உறுப்பு, $= t_{19}$

$$= a + (n-1)d$$
$$= -11 + (19 - 1)(-4)$$
$$= -11 + (18)(-4)$$
$$= -11 - 72$$
$$= -83$$

பயிற்சி 2.5

8) $3 + k, 18 - k, 5k + 1$ என்பவை ஒரு கூட்டுத்தொடர்வரிசையில் உள்ளன எனில் $k$ – ன் மதிப்பு காண்க. [PTA-3, PTA-4]

தீர்வு:-

தரவு, $a = 3 + k$, $b = 18 - k$, $c = 5k + 1$

WKT, $a, b, c$ என்பது ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் தொடர்ச்சியான மூன்று உறுப்புகள் எனில், $2b = a + c$.

$$2(18 - k) = 3 + k + 5k + 1$$
$$36 - 2k = 6k + 4$$
$$-6k - 2k = -36 + 4$$
$$-8k = -32$$
$$k = \frac{-32}{-8}$$
$$k = 4$$

**எ.கா : 2.19** பின்வரும் தொடர்வரிசைகளின் அடுத்த மூன்று உறுப்புகளைக் காண்க.

(i) $\frac{1}{2},\frac{1}{6},\frac{1}{10},\frac{1}{14},\ldots$ (ii) $5,2,-1,-4,\ldots$ (iii) $1,0.1,0.01,\ldots$

**தீர்வு**:-

(i) $\frac{1}{2},\frac{1}{6},\frac{1}{10},\frac{1}{14},\cdots$

இத்தொடர்வரிசையில், தொகுதி ஒரே எண்ணாக உள்ளது. மேலும் அடுத்தடுத்த உறுப்புகளின் பகுதியானது 4 அதிகரிக்கிறது.

எனவே, அடுத்த மூன்று உறுப்புகளானது,

$$a_5=\frac{1}{14+4}=\frac{1}{18}$$

$$a_6=\frac{1}{18+4}=\frac{1}{22}$$

$$a_7=\frac{1}{22+4}=\frac{1}{26}$$

எனவே, அடுத்த மூன்று உறுப்புகள், $\frac{1}{18},\frac{1}{22},\frac{1}{26}$

(ii) $5,2,-1,-4,\ldots$

இத்தொடர்வரிசையில், ஒவ்வொரு உறுப்பிலிருந்தும் 3 ஐக் கழிக்க அடுத்த உறுப்பு கிடைக்கிறது.

எனவே, அடுத்த மூன்று உறுப்புகளானது,

$a_5=-4-3=-7$

$a_6=-7-3=-10$

$a_7=-10-3=-13$

எனவே, அடுத்த மூன்று உறுப்புகள், $-7,-10,-13$

(iii) $1,0.1,0.01,\ldots$

இத்தொடர்வரிசையில், ஒவ்வொரு உறுப்பும் முந்தைய உறுப்பை 10 ஆல் வகுக்கக் கிடைக்கிறது.

எனவே, அடுத்த மூன்று உறுப்புகளானது,

$$a_4=\frac{0.01}{10}=0.001$$

$$a_5=\frac{0.001}{10}=0.0001$$

$$a_6=\frac{0.0001}{10}=0.00001$$

எனவே, அடுத்த மூன்று உறுப்புகள்,

$0.001\,,\,0.0001\,,\,0.00001$

## 3–இயற்கணிதம்

எடுத்துக்காட்டு 3.2 தீர்க்க $2x-3y=6\,,\,x+y=1$

தீர்வு

$2x-3y=6$

$x+y=1$

$(1)\times 1 \Rightarrow 2x-3y=6$

$(2)\times 2 \Rightarrow 2x+2y=2$

$-5y=4 \Rightarrow y=\frac{-4}{5}$

$y=\frac{-4}{5}$ என $(2)$-யில் பிரதியிட, $x-\frac{4}{5}=1$

$\Rightarrow x=\frac{9}{5}$

எனவே, $x=\frac{9}{5}\,,\,y=\frac{-4}{5}$.

## பயிற்சி 3.2–2 (iv)

$P^2 - 3P + 2, P^2 - 4$ ஆகியவற்றின் மீ. பொ. ம. காண்க

$$p^2 - 3p + 2 = (p-2)(p-1)$$

$$p^2 - 4 = (p-2)(p+2)$$

மீ.பொ.ம $= (p-2)(p-1)(p+2)$

**எடுத்துக்காட்டு 3.13** விகிதமுறு கோவைகளை எளிய வடிவில் சுருக்குக

(i) $\frac{x-3}{x^2-9}$ (ii) $\frac{x^2-16}{x^2+8x+16}$

**தீர்வு** (i) $\frac{x-3}{x^2-9} = \frac{x-3}{(x+3)(x-3)} = \frac{1}{x+3}$

(ii) $\frac{x^2-16}{x^2+8x+16} = \frac{(x+4)(x-4)}{(x+4)^2} = \frac{x-4}{x+4}$

**எடுத்துக்காட்டு 3.15** (i) $\frac{x^3}{9y^2}$ -ஐ $\frac{27y}{x^5}$ -ஆல் பெருக்குக.

**தீர்வு** (i) $\frac{x^3}{9y^2} \times \frac{27y}{x^5} = \frac{3}{x^2y}$

(ii) $\frac{x^4b^2}{x-1}$ -ஐ $\frac{x^2-1}{a^4b^3}$ -ஆல் பெருக்குக.

$$\frac{x^4b^2}{x-1} \times \frac{x^2-1}{a^4b^3} = \frac{x^4 \times b^2}{x-1} \times \frac{(x+1)(x-1)}{a^4 \times b^3}$$

$$= \frac{x^4(x+1)}{a^4b}$$

**எடுத்துக்காட்டு 3.16** பின்வருவனவற்றைக் காண்க

(i) $\frac{14x^4}{y} \div \frac{7x}{3y^4}$

$$= \frac{14x^4}{y} \times \frac{3y^4}{7x} = 6x^3y^3$$

(ii) $\frac{x^2-16}{x+4} \div \frac{x-4}{x+4}$

$$= \frac{(x+4)(x-4)}{(x+4)} \times \left(\frac{x+4}{x-4}\right) = x+4$$

(iii) $\frac{16x^2-2x-3}{3x^2-2x-1} \div \frac{8x^2+11x+3}{3x^2-11x-4}$

$$= \frac{16x^2-2x-3}{3x^2-2x-1} \times \frac{3x^2-11x-4}{8x^2+11x+3}$$

$$= \frac{(8x+3)(2x-1)}{(3x+1)(x-1)} \times \frac{(3x+1)(x-4)}{(8x+3)(x+1)}$$

$$= \frac{(2x-1)(x-4)}{(x-1)(x+1)} = \frac{2x^2-9x+4}{x^2-1}$$

**எடுத்துக்காட்டு 3.19** கீழ்க்கண்ட கோவைகளின் வர்க்கமூலம் காண்க.

(i) $256(x-a)^8(x-b)^4(x-c)^{16}(x-d)^{20}$

$$\sqrt{256(x-a)^8(x-b)^4(x-c)^{16}(x-d)^{20}}$$

$$= 16\left|(x-a)^4(x-b)^2(x-c)^8(x-d)^{10}\right|$$

(ii) $\frac{144\ a^8 b^{12} c^{16}}{81 f^{12} g^4 h^{14}}$

$$\sqrt{\frac{144a^8b^{12}c^{16}}{81f^{12}g^4h^{14}}} = \left|\frac{12}{9}\frac{a^4b^6c^8}{f^6g^2h^7}\right| = \frac{4}{3}\left|\frac{a^4b^6c^8}{f^6g^2h^7}\right|$$

**எடுத்துக்காட்டு 3.27** தீர்க்க $2m^2+19m+30=0$

**தீர்வு** $2m^2+19m+30 = 2m^2+4m+15m+30 = 2m(m+2)+15(m+2)$
$= (m+2)(2m+15)$

$(m+2)(2m+15)=0$ –யின் காரணிகளைப் பூச்சியத்திற்குச் சமன்படுத்த

$m+2=0 \Rightarrow m=-2$ அல்லது $2m+15=0 \Rightarrow m=\frac{-15}{2}$

மூலங்கள் $-2$ அல்லது $\frac{-15}{2}$.

<u>காரணிப்படுத்தல் முறையில் பின்வரும் சமன்பாடுகளைத் தீர்க்க :</u>

<u>பயிற்சி 3.10–1(ii)</u>

$3(p^2-6) = p(p+5)$

$3p^2 - 18 = p^2 + 5p$

$3p^2 - 18 - p^2 - 5p = 0$

$2p^2 - 5p - 18 = 0$ இதை காரணிபடுத்த

$\frac{1}{2}(2p+4)(2p-9) = 0$

$\frac{1}{2}\times 2(p+2)(2p-9) = 0$

$(p+2)(2p-9) = 0$

$(p+2) = 0$ அல்லது $(2p-9) = 0$

$\therefore \quad p = -2$ அல்லது $p = \frac{9}{2}$

மூலங்கள் $-2, \ \frac{9}{2}$

<u>பயிற்சி 3.10–1(iii)</u>

$\sqrt{a(a-7)} = 3\sqrt{2}$

இருபுறமும் வர்க்கப்படுத்த $a(a-7) = 9\times 2$

$a^2 - 7a = 18$

$a^2 - 7a - 18 = 0$ இதை காரணிபடுத்த

$\frac{1}{1}(a+2)(a-9) = 0$

$(a+2)(a-9) = 0$

$(a+2) = 0$ அல்லது $(a-9) = 0$

$\therefore \quad a = -2$ அல்லது $a = 9$

மூலங்கள் $-2, \ 9$

<u>பயிற்சி 3.10–2</u>

$n$ அணிகள் பங்குபெறும் ஒரு கையுந்து விளையாட்டு (*Volley ball*) போட்டியில் ஒவ்வோர் அணியும் மற்ற அனைத்து அணிகளோடும் விளையாட வேண்டும். 15 போட்டிகள் கொண்ட தொடரில் மொத்தப் போட்டிகளின் எண்ணிக்கை $G(n)=\frac{n^2-n}{2}$ எனில், பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கை எத்தனை?

கொடுக்கப்பட்டது $\frac{n^2-n}{2} = 15$

$n^2 - n = 15\times 2$

$n^2 - n = 30$

$n^2 - n - 30 = 0$ இதை காரணிபடுத்த

$(n+5)(n-6) = 0$

$(n+5) = 0$ அல்லது $(n-6) = 0$

$\therefore \quad n = -5$ அல்லது $n = 6$

மூலங்கள் $-5, \ 6$

அணிகளின் எண்ணிக்கை என்பது எப்போதும் மிகையாகும் எனவே பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கை $= 6$

## பயிற்சி 3.12

1. ஓர் எண் மற்றும் அவற்றின் தலைகீழி ஆகியவற்றின் வித்தியாசம் $\frac{24}{5}$ எனில் அந்த எண்ணைக் காண்க.

ஓர் எண் $x$ என்க

அதன் தலைகீழி $\frac{1}{x}$ என்க

கொடுக்கப்பட்டது $x-\frac{1}{x}=\frac{24}{5}$

$$\frac{x^2-1}{x}=\frac{24}{5}$$

$$(x^2-1)\times 5 = 24x$$

$$5x^2-5=24x$$

$$5x^2-24x-5=0$$ இதை காரணிபடுத்த

$$\frac{1}{5}(5x-25)(5x+1)=0$$

$$\frac{1}{5}\times 5(x-5)(5x+1)=0$$

$$(x-5)(5x+1)=0$$

$(x-5)=0$ அல்லது $(5x+1)=0$

$\therefore\ x=5$ $\quad x=\frac{-1}{5}$

அந்த எண்கள் $5,\ \frac{-1}{5}$

## எ.கா – 3.40

பின்வரும் இருபடிச்சமன்பாடுகளின் மூலங்களின் தன்மையை ஆராய்க.

(i) $x^2-x-20=0$

(ii) $9x^2-24x+16=0$

(iii) $2x^2-2x+9=0$

(i) $x^2-x-20=0$

இங்கு, $a=1,\ b=-1,\ c=-20$

தன்மைகாட்டி, $\Delta=b^2-4ac$

$$\Delta=(-1)^2-4(1)(-20)=81$$

$$\Delta=81>0.$$

எனவே, சமன்பாட்டின் மூலங்கள் மெய் மற்றும் சமமில்லை.

(ii) $9x^2-24x+16=0$

இங்கு, $a=9,\ b=-24,\ c=16$

தன்மைகாட்டி, $\Delta=b^2-4ac=(-24)^2-4(9)(16)=0$

$$\Delta=0.$$

எனவே, சமன்பாட்டின் மூலங்கள் மெய் மற்றும் சமம்.

(iii) $2x^2-2x+9=0$

இங்கு, $a=2,\ b=-2,\ c=9$

தன்மைகாட்டி, $\Delta=b^2-4ac=(-2)^2-4(2)(9)=-68$

$$\Delta=-68<0.$$

எனவே, இருபடிச் சமன்பாட்டிற்கு மெய் மூலங்கள் இல்லை.

## பயிற்சி 3.13–2

கொடுக்கப்பட்ட சமன்பாடுகளின் மூலங்கள் மெய் மற்றும் சமம் எனில், $k$-யின் மதிப்பைக் காண்க. (i) $(5k-6)x^2+2kx+1=0$

$(5k-6)x^2+2kx+1=0$

$a=5k-6\quad b=2k\quad c=1$

மூலங்கள் மெய் மற்றும் சமம் என்பதால் $\Delta=b^2-4ac=0$

$$(2k)^2-4\times(5k-6)\times 1=0$$

$$4k^2-20k+24=0$$ இதை 4 ஆல் வகுக்க

$$k^2-5k+6=0$$ இதை காரணிபடுத்த

$$(k-2)(k-3)=0$$

$(k-2)=0$ அல்லது $(k-3)=0$

$k=2\quad k=3$

$\therefore\ k=2\ ,\ 3$

# 5.ஆயத்தொலை வடிவியல்

## பயிற்சி - 5.1

1) கீழ்க்கண்ட புள்ளிகளால் அமைக்கப்படும் முக்கோணத்தின் பரப்பு காண்க.

(i) $(1,-1),(-4,6)$மற்றும் $(-3,-5)$

**தீர்வு**:-

(i) $(1,-1),(-4,6)$மற்றும் $(-3,-5)$

**தரவு,** $(x_1,y_1)=(1,-1)$

$(x_2,y_2)=(-4,6)$

$(x_3,y_3)=(-3,-5)$

∴ முக்கோணத்தின் பரப்பு

$$=\frac{1}{2}\begin{Bmatrix} x_1 & x_2 & x_3 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_1 \end{Bmatrix}$$

$$=\frac{1}{2}\begin{Bmatrix} 1 & -4 & -3 & 1 \\ -1 & 6 & -5 & -1 \end{Bmatrix}$$

$$=\frac{1}{2}(6+20+3-4+18+5\}$$

$$=\frac{1}{2}(52-4)$$

$$=\frac{48}{2}$$

$= 24$ சதுர அலகுகள்

2) கீழ்க்காணும் புள்ளிகள் ஒரே நேர்க்கோட்டில் அமையுமா எனத் தீர்மானிக்கவும்.

(i) $\left(-\frac{1}{2},3\right),(-5,6)$ மற்றும் $(-8,8)$

**தீர்வு**:-

(i) $\left(-\frac{1}{2},3\right),(-5,6)$ மற்றும் $(-8,8)$

**தரவு,**

$(x_1,y_1)=\left(-\frac{1}{2},3\right)=(-0.5,3)$

$(x_2,y_2)=(-5,6)$

$(x_3,y_3)=(-8,8)$

∴ முக்கோணத்தின் பரப்பு

$$=\frac{1}{2}\begin{Bmatrix} x_1 & x_2 & x_3 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_1 \end{Bmatrix}$$

$$=\frac{1}{2}\begin{Bmatrix} -0.5 & -5 & -8 & -0.5 \\ 3 & 6 & 8 & 3 \end{Bmatrix}$$

$$=\frac{1}{2}(-3-40-24+15++48+4)$$

$$=\frac{1}{2}(-67+67)$$

$= 0$

எனவே, கொடுக்கப்பட்ட புள்ளிகள் ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ளன.

**எ.கா : 5.8** (i) ஒரு கோட்டின் சாய்வுக்கோணம் $30^o$ எனில், அக்கோட்டின் சாய்வைக் காண்க. (ii) ஒரு கோட்டின் சாய்வு $\sqrt{3}$ எனில், அக்கோட்டின் சாய்வுக்கோணம் காண்க.

**தீர்வு**:-

(i) **தரவு**, சாய்வுக்கோணம், $\theta = 30^o$

**WKT**, சாய்வு, $m = tan\theta$

∴ சாய்வு, $m = tan30^o = \frac{1}{\sqrt{3}}$

(ii) **தரவு**, சாய்வு, $m=\sqrt{3}$

**WKT**, சாய்வு, $m = tan\theta$

$\Rightarrow \sqrt{3} = tan\theta$

∴ $\theta = 60^o$ $\quad [\because tan60^o = \sqrt{3}]$

**எ.கா : 5.9** கொடுக்கப்பட்ட புள்ளிகளை இணைக்கும் நேர்க்கோட்டின் சாய்வைக் காண்க.

(i) $(-6,1)$ மற்றும் $(-3,\ 2)$

**தீர்வு**:-

(i) $(x_1,y_1)=(-6,1)$ மற்றும் $(x_2,y_2)=(-3,\ 2)$

**WKT**, சாய்வு, $m=\frac{y_2-y_1}{x_2-x_1}$

∴ சாய்வு, $m=\frac{2-1}{-3-(-6)}=\frac{1}{-3+6}=\frac{1}{3}$

## பயிற்சி 5.2

7) $(-2,a)$ மற்றும் $(9,\ 3)$ என்ற புள்ளிகள் வழிச் செல்லும் நேர்கோட்டின் சாய்வு $\frac{-1}{2}$ எனில், $'a'$ – யின் மதிப்பைக் காண்க.

**தீர்வு**:-

**தரவு**,

$$(x_1,y_1)=(-2,a)$$
$$(x_2,y_2)=(9,3)$$
$$m=\frac{-1}{2}$$

**WKT**, சாய்வு, $m=\frac{y_2-y_1}{x_2-x_1}$

$$\frac{-1}{2}=\frac{3-a}{9-(-2)}$$
$$\frac{-1}{2}=\frac{3-a}{9+2}$$
$$\frac{-1}{2}=\frac{3-a}{11}$$
$$-1(11)=2(3-a)$$
$$-11=6-2a$$
$$2a=6+11$$
$$2a=17$$
$$a=\frac{17}{2}$$

8) $(-2,6)$ மற்றும் $(4,8)$ என்ற புள்ளிகள் வழிச் செல்லும் நேர்கோடானது $(8,12)$ மற்றும் $(x,24)$ என்ற புள்ளிகள் வழிச் செல்லும் நேர்கோட்டிற்குச் செங்குத்து எனில், $'x'$ – யின் மதிப்பைக் காண்க. [PTA-6]

**தீர்வு**:-

$(-2,6)$ மற்றும் $(4,8)$ என்ற புள்ளிகள் வழிச் செல்லும் நேர்கோட்டின் சாய்வு,

$$m_1=\frac{y_2-y_1}{x_2-x_1}=\frac{8-6}{4-(-2)}=\frac{2}{4+2}=\frac{2}{6}=\frac{1}{3}$$

$(8,12)$ மற்றும் $(x,24)$ என்ற புள்ளிகள் வழிச் செல்லும் நேர்கோட்டின் சாய்வு,

$$m_2=\frac{y_2-y_1}{x_2-x_1}=\frac{24-12}{x-8}=\frac{12}{x-8}$$

**WKT**, இரு நேர்கோடுகள் ஒன்றுக்கொன்று செங்குத்தானவை எனில்,

$$m_1 \text{ x } m_2=-1$$
$$\frac{1}{3}\text{ x }\frac{12}{x-8}=-1$$
$$\frac{4}{x-8}=-1$$
$$4=-(x-8)$$
$$4=-x+8$$
$$x=8-4$$
$$x=4$$

**எ.கா : 5.18** பின்வரும் விவரங்களைப் பயன்படுத்தி நேர்க்கோட்டின் சமன்பாடு காண்க.

(ii) சாய்வுக்கோணம் $45^o$ மற்றும் $y$-வெட்டுத் துண்டு $11$

**தரவு**, சாய்வுக்கோணம், $\theta=45^o$ மற்றும்
$y$-வெட்டுத் துண்டு, $c=11$

**WKT**, சாய்வு, $m=tan\theta$

∴ சாய்வு, $m=tan45^o=1$

**WKT**, சாய்வு - வெட்டுத்துண்டு அமைப்பில் நேர்க்கோட்டின் சமன்பாடு, $y=mx+c$ ஆகும்.

∴ தேவையான நேர்க்கோட்டின் சமன்பாடு,

$$y=1x+11$$
$$x-y+11=0$$

**எ.கா : 5.19** $8x-7y+6=0$ என்ற கோட்டின் சாய்வு மற்றும் $y$-வெட்டுத் துண்டு ஆகியவற்றைக் காண்க.

**தீர்வு**:-

தரப்பட்டுள்ள நேர்க்கோட்டின் சமன்பாடு, $8x-7y+6=0$

$$-7y=-8x-6$$
$$7y=8x+6$$
$$y=\frac{8}{7}x+\frac{6}{7}$$

இதனை $y=mx+c$ உடன் ஒப்பிடும் போது,

சாய்வு, $m=\frac{8}{7}$ மற்றும் $y$ -வெட்டுத்துண்டு, $c=\frac{6}{7}$

**எ.கா : 5.21** $(3,-4)$ என்ற புள்ளியின் வழி செல்வதும், $\frac{-5}{7}$ - ஐ சாய்வாக உடையதுமான நேர்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.

**தீர்வு**:-

**தரவு**, $(x_1,y_1)=(3,-4)$ மற்றும் சாய்வு, $m=\frac{-5}{7}$

**WKT**, சாய்வு - புள்ளி அமைப்பில் நேர்க்கோட்டின் சமன்பாடு,

$$y-y_1=m(x-x_1)$$

∴ தேவையான நேர்க்கோட்டின் சமன்பாடு,

$$y-(-4)=\frac{-5}{7}(x-3)$$
$$7(y+4)=-5(x-3)$$
$$7y+28=-5x+15$$
$$7y+28+5x-15=0$$
$$5x+7y+13=0$$

**எ.கா : 5.23** $(5,-3)$ மற்றும் $(7,-4)$ என்ற இரு புள்ளிகள் வழிச் செல்லும் நேர்க்கோட்டின் சமன்பாடு காண்க.

**தீர்வு**:-

**தரவு**, $(x_1,y_1)=(5,-3)$ மற்றும் $(x_2,y_2)=(7,-4)$

**WKT**, இரு புள்ளிகள் அமைப்பில் நேர்க்கோட்டின் சமன்பாடு,

$$\frac{y-y_1}{y_2-y_1}=\frac{x-x_1}{x_2-x_1}$$

∴ தேவையான நேர்க்கோட்டின் சமன்பாடு,

$$\frac{y-(-3)}{-4-(-3)}=\frac{x-5}{7-5}$$
$$\frac{y+3}{-4+3}=\frac{x-5}{2}$$
$$\frac{y+3}{-1}=\frac{x-5}{2}$$
$$2(y+3)=-1(x-5)$$
$$2y+6=-x+5$$
$$2y+6+x-5=0$$
$$x+2y+1=0$$

**எ.கா : 5.26** $4x-9y+36=0$ என்ற நேர்கோடு ஆய அச்சுகளில் ஏற்படுத்தும் வெட்டுத்துண்டுகளைக் காண்க.

**தீர்வு**:-

தரப்பட்டுள்ள நேர்க்கோட்டின் சமன்பாடு, $4x-9y+36=0$

$$4x-9y=-36$$
$$\frac{4x-9y}{-36}=1$$
$$\frac{4x}{-36}-\frac{9y}{-36}=1$$
$$\frac{x}{-9}+\frac{y}{4}=1$$

இதனை $\frac{x}{a}+\frac{y}{b}=1$ உடன் ஒப்பிடும் போது,

$x$ - வெட்டுத்துண்டு, $a=-9$ மற்றும்

$y$ - வெட்டுத்துண்டு, $b=4$

## பயிற்சி 5.3

6) $(19,3)$ என்ற புள்ளியை அடியாகக் கொண்ட குன்றானது முக்கோண வடிவில் உள்ளது. தரையுடன் குன்று ஏற்படுத்தும் சாய்வுக்கோணம் $45^o$ எனில், குன்றின் அடி மற்றும் உச்சியை இணைக்கும் கோட்டின் சமன்பாட்டைக் காண்க. [PTA-2]

**தீர்வு**:-

**தரவு**,
சாய்வுக்கோணம்,

$$\theta=45^o$$




**WKT**, சாய்வு, $m=tan\theta$

$$\therefore\ m=tan45^o=1$$
$$(x_1,y_1)=B(19,3)$$

தேவையான நேர்க்கோடு, BC – ன் சமன்பாடு,

$$y-y_1=m(x-x_1)$$
$$y-3=1(x-19)$$
$$y-3=x-19$$
$$x-19-y+3=0$$
$$x-y-16=0$$

12) கீழே கொடுக்கப்பட்டுள்ள $x, y$ வெட்டுத்துண்டுகளைக் கொண்ட நேர்க்கோடுகளின் சமன்பாடுகளைக் காண்க.

(i) $4, -6$

(ii) $-5, \frac{3}{4}$

**தீர்வு**:-

(i) **தரவு,** $x$ - வெட்டுத்துண்டு, $a = 4$

$y$ - வெட்டுத்துண்டு, $b = -6$

**WKT,** வெட்டுத்துண்டுகள் அமைப்பில் நேர்கோட்டின் சமன்பாடு,

$$\frac{x}{a} + \frac{y}{b} = 1$$

∴ தேவையான நேர்க்கோட்டின் சமன்பாடு,

$$\frac{x}{4} + \frac{y}{-6} = 1$$

$$\frac{x}{4} - \frac{y}{6} = 1$$

$$\frac{3x - 2y}{12} = 1$$

$$3x - 2y = 12$$

$$3x - 2y - 12 = 0$$

(ii) **தரவு,** $x$ - வெட்டுத்துண்டு, $a = -5$

$y$ - வெட்டுத்துண்டு, $b = \frac{3}{4}$

**WKT,** வெட்டுத்துண்டுகள் அமைப்பில் நேர்கோட்டின் சமன்பாடு,

$$\frac{x}{a} + \frac{y}{b} = 1$$

∴ தேவையான நேர்க்கோட்டின் சமன்பாடு,

$$\frac{x}{-5} + \frac{y}{\frac{3}{4}} = 1$$

$$\frac{x}{-5} + \frac{4y}{3} = 1$$

$$\frac{-x}{5} + \frac{4y}{3} = 1$$

$$\frac{-3x + 20y}{15} = 1$$

$$-3x + 20y = 15$$

$$3x - 20y + 15 = 0$$

## 6.முக்கோணவியல்

**எ.கா-6.19** ஒரு கோபுரம் தரைக்குச் செங்குத்தாக உள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதியிலிருந்து தரையில் 48 மீ, தொலைவில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுர உச்சியின் ஏற்றக்கோணம் $30^o$ எனில், கோபுரத்தின் உயரத்தைக் காண்க.

**தீர்வு**:-




$PQ =$ கோபுரத்தின் உயரம் $= h$ என்க.

செங்கோண $\Delta PQR$ – இல்,

$$tan30^o = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}} = \frac{PQ}{QR}$$

$$\frac{1}{\sqrt{3}} = \frac{h}{48}$$

$$\frac{48}{\sqrt{3}} = h$$

$$h = \frac{3 \text{ x } 16}{\sqrt{3}}$$

$$h = \frac{\sqrt{3} \text{ x } \sqrt{3} \text{ x } 16}{\sqrt{3}}$$

$$h = 16\sqrt{3} \text{ மீ}$$

∴ கோபுரத்தின் உயரம் $= 16\sqrt{3}$ மீ

**எ.கா-6.20** தரையிலிருந்து ஒரு பட்டம் 75 மீ உயரத்தில் பறக்கிறது. ஒரு நூல் கொண்டு தற்காலிகமாகத் தரையின் ஒரு புள்ளியில் பட்டம் கட்டபட்டுள்ளது. நூல் தரையுடன் ஏற்படுத்தும் சாய்வுக்கோணம் $60^o$ எனில், நூலின் நீளம் காண்க. (நூலை ஒரு நேர்க்கோடாக எடுத்துக்கொள்ளவும்)

**தீர்வு**:-




$AB =$ தரையிலிருந்து பட்டம் பறக்கும் உயரம்

$= 75$ மீ

$AC =$ நூலின் நீளம் $= x$ என்க.

செங்கோண $\Delta PQR$ – இல்,

$$sin60^o = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{கர்ணம்}} = \frac{AB}{AC}$$

$$\frac{\sqrt{3}}{2} = \frac{75}{x}$$

$$x = \frac{75 \text{ x } 2}{\sqrt{3}}$$

$$x = \frac{150}{\sqrt{3}} \times \frac{\sqrt{3}}{\sqrt{3}}$$

$$x = \frac{150\sqrt{3}}{\sqrt{3}^2}$$

$$x = \frac{150\sqrt{3}}{3}$$

$$h = 50\sqrt{3} \text{ மீ}$$

∴ நூலின் நீளம் $= 50\sqrt{3}$ மீ

## பயிற்சி 6.2

1) $10\sqrt{3}$ மீ உயரமுள்ள கோபுரத்தின் அடியிலிருந்து 30 மீ தொலைவில் தரையில் உள்ள ஒரு புள்ளியிலிருந்து கோபுரத்தின் உச்சியின் ஏற்றக்கோணத்தைக் காண்க. [PTA-2]

**தீர்வு:-**




$AB =$ கோபுரத்தின் உயரம் $= 10\sqrt{3}$ மீ

$BC =$ கோபுரத்தின் அடியிலிருந்து புள்ளி வரை உள்ள தூரம் $= 30$ மீ

$\theta =$ கோபுரத்தின் உச்சியின் ஏற்றக்கோணம்

செங்கோண $\Delta ABC$ – இல், $tan\theta = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}} = \frac{AB}{BC}$

$$tan\theta = \frac{10\sqrt{3}}{30}$$

$$tan\theta = \frac{\sqrt{3}}{3}$$

$$tan\theta = \frac{\sqrt{3}}{\sqrt{3}\sqrt{3}}$$

$$tan\theta = \frac{1}{\sqrt{3}}$$

$$\theta = 30^o$$

∴ கோபுரத்தின் உச்சியின் ஏற்றக்கோணம், $\theta = 30^o$

**எ.கா-6.26** 20 மீ உயரமுள்ள கட்டிடத்தின் உச்சியில் ஒரு விளையாட்டு வீரர் அமர்ந்து கொண்டு தரையில் உள்ள ஒரு பந்தை $60^o$ இறக்கக்கோணத்தில் காண்கிறார் எனில் கட்டிட அடிப்பகுதிக்கும் பந்திற்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க. $(\sqrt{3} = 1.732)$ [PTA-3]

**தீர்வு:-**

$AC =$ கட்டிடத்தின் உயரம் $= 20$ மீ.

$AB =$ கட்டிட அடிப்பகுதிக்கும் பந்திற்கும் இடையேயுள்ள தொலைவு $= x$ என்க.

செங்கோண $\Delta ABC$ – இல்,

$$tan60^o = \frac{AC}{AB}$$

$$\sqrt{3} = \frac{20}{x}$$




$$x = \frac{20}{\sqrt{3}}$$

## பயிற்சி 6.3

1) $50\sqrt{3}$ மீ உயரமுள்ள ஒரு பாறையின் உச்சியிலிருந்து $30^o$ இறக்கக்கோணத்தில் தரையிலுள்ள மகிழுந்து ஒன்று பார்க்கப்படுகிறது எனில், மகிழுந்திற்கும் பாறைக்கும் இடையேயுள்ள தொலைவைக் காண்க. [PTA-6]

**தீர்வு:-**




$AB =$ தரையிலிருந்து பாறையின் உயரம் $= 50\sqrt{3}$ மீ

$BC =$ மகிழுந்திற்கும் பாறைக்கும் இடையேயுள்ள தொலைவு $= x$ என்க.

செங்கோண $\Delta ABC$ – இல், $tan30^o = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{அடுத்துள்ள பக்கம்}} = \frac{AB}{BC}$

$$\frac{1}{\sqrt{3}} = \frac{50\sqrt{3}}{x}$$

$$x = 50\sqrt{3}\sqrt{3}$$

$$x = 50 \times 3$$

$$x = 150 \text{ மீ}$$

∴ மகிழுந்திற்கும் பாறைக்கும் இடையேயுள்ள தொலைவு $= 150$ மீ

# 7.அளவியல்

**எ.கா : 7.1** ஓர் உருளை வடிவப் பீப்பாயின் உயரம் 20 செ.மீ மற்றும் அடிப்புற ஆரம் 14 செ.மீ எனில், அதன் வளைபரப்பு மற்றும் மொத்த புறப்பரப்பைக் காண்க.

**தீர்வு:-**

**தரவு**, உயரம் $h = 20$ செ.மீ

ஆரம் $r = 14$ செ.மீ

(i) உருளையின் வளைபரப்பு $= 2\pi rh$

$= 2 \times \frac{22}{7} \times 14 \times 20$

$= 88 \times 20$

$= 1760$ ச.செ.மீ

(ii) உருளையின் வளைபரப்பு $= 2\pi r(h + r)$

$= 2 \times \frac{22}{7} \times 14 \times (20 + 14)$

$= 88 \times 34$

$= 2992$ ச.செ.மீ

**எ.கா : 7.3** நீளம் 3 மீ மற்றும் விட்டம் 2.8 மீ உடைய ஒரு சமன்படுத்தும் உருளையைக் கொண்டு ஒரு தோட்டம் சமன்படுத்தப்படுகிறது. 8 சுற்றுகளில் எவ்வளவு பரப்பை உருளை சமன் செய்யும்?

**தீர்வு:-**

**தரவு**, உயரம் $h = 3$ மீ

விட்டம் $= 2.8$ மீ

ஆரம் $r = 1.4$ மீ $= \frac{14}{10}$ மீ

உருளை ஒரு சுற்றில் சமன்படுத்தும் பரப்பு

$=$ உருளையின் வளைபரப்பு

$= 2\pi rh$

$= 2 \times \frac{22}{7} \times \frac{14}{10} \times 3$

$= \frac{264}{10}$

$= 26.4$ ச.மீ

$\therefore$ உருளை 8 சுற்றுகளில் சமன்படுத்தும் பரப்பு $= 8 \times 26.4$

$= 211.2$ ச.மீ

**எ.கா : 7.6** 704 ச.செ.மீ மொத்தப் புறப்பரப்பு கொண்ட ஒரு கூம்பின் ஆரம் 7 செ.மீ எனில், அதன் சாயுயரம் காண்க.

**தீர்வு:-**

**தரவு**, ஆரம், $r = 7$ செ.மீ

கூம்பின் மொத்த புறப்பரப்பு $= 704$ ச.செ.மீ

**WKT**, கூம்பின் மொத்த புறப்பரப்பு $= \pi r(l + r)$

$\Rightarrow \pi r(l + r) = 704$

$\frac{22}{7} \times 7 \times (l + 7) = 704$

$l + 7 = \frac{704}{22}$

$l + 7 = 32$

$l = 32 - 7$

$l = 25$ செ.மீ

**எ.கா : 7.8** ஒரு கோளத்தின் புறப்பரப்பு 154 ச.மீ எனில், அதன் விட்டம் காண்க. [S-20]

**தீர்வு:-**

**WKT**, கோளத்தின் புறப்பரப்பு $= 4\pi r^2$

**தரவு**, ஆரம், $= r$ என்க.

கோளத்தின் புறப்பரப்பு $= 154$ ச.மீ

$4\pi r^2 = 154$

$4 \times \frac{22}{7} \times r^2 = 154$

$r^2 = \frac{154 \times 7}{4 \times 22}$

$r^2 = \frac{7 \times 7}{2 \times 2}$

$r = \frac{7}{2}$

$\therefore$ கோளத்தின் விட்டம் $= 2r = 2 \times \frac{7}{2} = 7$ செ.மீ

## பயிற்சி 7.1

3) ஓர் உள்ளீடற்ற மர உருளையின் வெளிப்புற ஆரம் மற்றும் நீளம் முறையே 16 செ.மீ மற்றும் 13 செ.மீ ஆகும். அதன் தடிமன் 4 செ.மீ எனில் உருளையின் மொத்தப்புறப்பரப்பு எவ்வளவு?

**தீர்வு**:-

**தரவு**, நீளம் (உயரம்), $h = 13$ செ.மீ

வெளிப்புற ஆரம் $R = 16$ செ.மீ

தடிமன் $= 4$ செ.மீ

உட்புற ஆரம் $r = 16 - 4 = 12$ செ.மீ

உள்ளீடற்ற உருளையின் மொத்தப் புறப்பரப்பு

$$= 2\pi(R + r)(R - r + h)$$

$$= 2 \text{ x } \frac{22}{7} \text{ x } (16 + 12) \text{ x } (16 - 12 + 13)$$

$$= 2 \text{ x } \frac{22}{7} \text{ x } 28 \text{ x } 17$$

$$= 44 \text{ x } 68$$

$= 2992$ ச.செ.மீ

**எ.கா : 7.15** உயரம் 2 மீ மற்றும் அடிப்பரப்பு 250 ச.மீ கொண்ட ஓர் உருளையின் கன அளவைக் காண்க.

**தீர்வு**:-

**தரவு**, உயரம் $h = 2$ மீ

உருளையின் அடிப்பரப்பு,$= 250$ ச.மீ

$\pi r^2 = 250$ ச.மீ

∴ உருளையின் கன அளவு $= \pi r^2 h$

$$= 250 \text{ x } 2$$

$= 500$ க.மீ

**எ.கா : 7.19** ஒரு நேர்வட்டக்கூம்பின் கன அளவு 11088 க.செ.மீ ஆகும். கூம்பின் உயரம் 24 செ.மீ எனில், அதன் ஆரம் காண்க.

**தீர்வு**:-

**WKT**, கூம்பின் கன அளவு $= \frac{1}{3}\pi r^2 h$

**தரவு**, உயரம், $h = 24$ செ.மீ

ஆரம், $= r$ என்க.

கூம்பின் கன அளவு $= 11088$ க.செ.மீ

$$\Rightarrow \frac{1}{3}\pi r^2 h = 11088$$

$$\frac{1}{3} \text{ x } \frac{22}{7} \text{ x } r^2 \text{ x } 24 = 11088$$

$$r^2 = \frac{11088 \text{ x } 3 \text{ x } 7}{22 \text{ x } 24}$$

$$r^2 = 441$$

$$r^2 = 21 \text{ x } 21$$

$r = 21$ செ.மீ

∴ கூம்பின் ஆரம், $r = 21$ செ.மீ

## பயிற்சி 7.2

3) 484 செ.மீ சுற்றளவுள்ள ஒரு மரக்கூம்பின் உயரம் 105 செ.மீ எனில், கூம்பின் கன அளவைக் காண்க.

**தீர்வு**:-

ஆரம் $= r$ என்க

**தரவு**, உயரம், $h = 105$ செ.மீ

கூம்பின் அடிச்சுற்றளவு $= 484$ செ.மீ

$$2\pi r = 484$$

$$2 \text{ x } \frac{22}{7} \text{ x } r = 484$$

$$r = \frac{484 \text{ x } 7}{2 \text{ x } 22}$$

$$r = 11 \text{ x } 7$$

$r = 77$ செ.மீ

∴ கூம்பின் கன அளவு $= \frac{1}{3}\pi r^2 h$

$$= \frac{1}{3} \text{ x } \frac{22}{7} \text{ x } 77 \text{ x } 77 \text{ x } 105$$

$$= 22 \text{ x } 11 \text{ x } 77 \text{ x } 35$$

$= 652190$ க.செ.மீ.

7) இரு கோளங்களின் ஆரங்களின் விகிதம் 4 : 7 எனில், அவற்றின் கன் அளவுகளின் விகிதம் காண்க.

**தீர்வு**:-

**தரவு**,

**கோளம்-1**:- ஆரம் $r_1 = 4$

**கோளம்-2**:- ஆரம் $r_2 = 7$

இரு கோளங்களின் கன அளவுகளின் விகிதம்

$$= \frac{4}{3}\pi r_1^3 : \frac{4}{3}\pi r_2^3$$

$$= \frac{\frac{4}{3}\pi r_1^3}{\frac{4}{3}\pi r_2^3}$$

$$= \frac{r_1^3}{r_2^3}$$

$$= \frac{4^3}{7^3}$$

$$= \frac{4 \text{ x } 4 \text{ x } 4}{7 \text{ x } 7 \text{ x } 7}$$

$$= \frac{64}{343}$$

$$= 64 : 343$$

## பயிற்சி 7.3

1) ஓர் அரைக்கோளத்தின் மேல் ஓர் உள்ளீடற்ற உருளையைப் பொருத்திய வடிவத்தில் அமைந்த ஒரு கிண்ணத்தின் விட்டம் 14 செ.மீ மற்றும் உயரம் 13 செ.மீ எனில், அதன் கொள்ளளவைக் காண்க.

**தீர்வு**:-

**தரவு**, கிண்ணத்தின் மொத்த உயரம் = 13 செ.மீ

**அரைக்கோளம்**:-

விட்டம் = 14 செ.மீ

ஆரம், $r = 7$ செ.மீ

**உருளை**:-

விட்டம் = 14 செ.மீ

ஆரம், $r = 7$ செ.மீ

உயரம், $h = 13 - 7 = 6$ செ.மீ




∴ கிண்ணத்தின் கொள்ளளவு

= அரைக்கோளத்தின் கனஅளவு + உருளையின் கனஅளவு

$$= \frac{2}{3}\pi r^3 + \pi r^2 h$$

$$= \pi r^2 \left(\frac{2}{3} r + h\right)$$

$$= \frac{22}{7} \text{ x } 7 \text{ x } 7 \text{ x } \left(\frac{2 \text{ x } 7}{3} + 6\right)$$

$$= 154 \text{ x} \left(\frac{14 + 18}{3}\right)$$

$$= 154 \text{ x} \frac{32}{3}$$

$= 1642.67$ க.செ.மீ

# 8.நிகழ்தகவு

**எ.கா:8.17** மர வரைபடத்தைப் பயன்படுத்தி இரண்டு பகடை உருட்டப்படும்போது கிடைக்கும் கூறுவெளியை எழுதுக.

**தீர்வு**:-

$$S = \{(1,1),(1,2),(1,3),(1,4),(1,5),(1,6),(2,1),(2,2),(2,3),(2,4),(2,5),(2,6),(3,1),(3,2),(3,3),(3,4),(3,5),(3,6),(4,1),(4,2),(4,3),(4,4),(4,5),(4,6),(5,1),(5,2),(5,3),(5,4),(5,5),(5,6),(6,1),(6,2),(6,3),(6,4),(6,5),(6,6)\}$$

$\therefore n(S) = 36$




**எ.கா:8.18** ஒரு பையில் 5 நீல நிறப்பந்துகளும், 4 பச்சை நிறப்பந்துகளும் உள்ளன. பையிலிருந்து சமவாய்ப்பு முறையில் ஒரு பந்து எடுக்கப்படுகிறது. எடுக்கப்படும் பந்தானது (i) நீலமாக (ii) நீலமாக இல்லாமல் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

**தீர்வு**:-

மொத்த வாய்ப்புகள், $n(S) = 5 + 4 = 9$

(i) $A$ என்பது நீல நிறப்பந்தைப் பெறுவதற்கான நிகழ்ச்சி என்க.

$$n(A) = 5$$

$$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{5}{9}$$

(ii) $\bar{A}$என்பது நீல நிறப்பந்து கிடைக்காமல் இருப்பதற்கான நிகழ்ச்சி என்க.

$$P(\bar{A}) = 1 - P(A) = 1 - \frac{5}{9} = \frac{9-5}{9} = \frac{4}{9}$$

**எ.கா:8.20** இரண்டு நாணயங்கள் ஒன்றாகச் சுண்டப்படுகின்றன. இரண்டு நாணயங்களிலும் வெவ்வேறு முகங்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

**தீர்வு**:-

கூறுவெளி, $S = \{HH, HT, TH, TT\}$

$$n(S) = 4$$

$A$ என்பது இரண்டு நாணயங்களிலும் வெவ்வேறு முகங்கள் கிடைப்பதற்கான நிகழ்ச்சி என்க

$$A = \{HT, TH\}$$

$$n(A) = 2$$

$$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{2}{4} = \frac{1}{2}$$

**எ.கா:8.22** ஒரு நெட்டாண்டில் (Leap year) 53 சனிக்கிழமைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

**தீர்வு**:-

நெட்டாண்டில் உள்ள மொத்த நாட்கள்

$= 366$ நாட்கள்

$= 52$ வாரங்கள் $+ 2$ நாட்கள்.

வாரங்களில் சனிக்கிழமைகள் கிடைத்து விடும். மீதமுள்ள இரண்டு நாட்களுக்கான வாய்ப்புகள் கீழ்க்காணும் கூறுவெளியில் கிடைக்கும்.

$S = \{$ஞா-தி, தி-செ, செ-பு, பு-வி, வி-வெ, வெ-ச, ச-ஞா$\}$

$\therefore\ n(S) = 7$

$A$ என்பது 53-வது சனிக்கிழமை கிடைக்கும் நிகழ்ச்சி என்க.

$A = \{$வெ-ச, ச-ஞா$\}$

$\therefore n(A) = 2$

$$\therefore P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{2}{7}$$

**<u>பயிற்சி 8.3</u>**

1) மூன்று நாணயங்கள் சுண்டப்படும் பொழுது கிடைக்கும் கூறுவெளியை மர வரைபடத்தைப் பயன்படுத்தி எழுதுக.

<u>தீர்வு</u>:-




$S = \{HHH, HHT, HTH, HTT, THH, THT, TTH, TTT\}$

$\therefore n(S) = 8$

2) ஒரு பையிலுள்ள 1 முதல் 6 வரை எண்கள் குறிக்கப்பட்ட பந்துகளிலிருந்து, இரண்டு பந்துகள் எடுப்பதற்கான கூறுவெளியை மர வரைபடம் மூலமாகக் குறிப்பிடுக. [PTA-4]

<u>தீர்வு</u>:-

$S = \{(1,1), (1,2), (1,3), (1,4), (1,5), (1,6),$
$(2,1), (2,2), (2,3), (2,4), (2,5), (2,6),$
$(3,1), (3,2), (3,3), (3,4), (3,5), (3,6),$
$(4,1), (4,2), (4,3), (4,4), (4,5), (4,6),$
$(5,1), (5,2), (5,3), (5,4), (5,5), (5,6),$
$(6,1), (6,2), (6,3), (6,4), (6,5), (6,6)\}$

$\therefore\ n(S) = 36$



3) ஒரு சமவாய்ப்புச் சோதனையில் ஒரு நிகழ்ச்சி $A$ என்க. இங்கு $P(A) : P(\bar{A}) = 17 : 15$ மற்றும் $n(S) = 640$ எனில் (i) $P(\bar{A})$ (ii) $n(A)$- ஐக் காண்க. [PTA-3]

**தீர்வு**:-

**தரவு**. $P(A) : P(\bar{A}) = 17 : 15$

(i)

$$\frac{P(A)}{P(\bar{A})} = \frac{17}{15}$$

$$15\,P(A) = 17\,P(\bar{A})$$

$$15\,[1 - P(\bar{A})] = 17\,P(\bar{A})$$

$$15 - 15\,P(\bar{A}) = 17\,P(\bar{A})$$

$$-15\,P(\bar{A}) - 17\,P(\bar{A}) = -15$$

$$-32\,P(\bar{A}) = -15$$

$$P(\bar{A}) = \frac{15}{32}$$

(ii)

$$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{17}{32}$$

$$\frac{n(A)}{640} = \frac{17}{32}$$

$$n(A) = \frac{17}{32} \times 640 = 340$$

4) ஒரு நாணயம் மூன்று முறை சுண்டப்படுகிறது. இரண்டு அடுத்தடுத்த பூக்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவு என்ன?

**தீர்வு**:-

$$S = \{HHH, HHT, HTH, HTT, THH, THT, TTH, TTT\}$$

$$n(S) = 8$$

$A$ என்பது இரண்டு அடுத்தடுத்த பூக்கள் கிடைப்பதற்கான நிகழ்ச்சி என்க

$$A = \{HTT, TTH, TTT\}$$

$$n(A) = 3$$

$$P(A) = \frac{n(A)}{n(S)} = \frac{3}{8}$$

# 5 மதிப்பெண்கள் 1.உறவுகள்

**எ.கா : 1.1**

$A = \{1,3,5\}$ மற்றும் $B = \{2,3\}$ எனில், (i) $A \times B$ மற்றும் $B \times A$ ஐக் காண்க. (ii) $A \times B = B \times A$ ஆகுமா? இல்லையெனில் ஏன்? (iii) $n(A \times B) = n(B \times A) = n(A) \times n(B)$ எனக் காட்டுக.

**தீர்வு**:-

**தரவு**, $A = \{1,3,5\}$ மற்றும் $B = \{2,3\}$

(i) $A \times B = \{1,3,5\} \times \{2,3\}$

$A \times B = \{(1,2),(1,3),(3,2),(3,3),(5,2),(5,3)\} \rightarrow (1)$

$B \times A = \{2,3\} \times \{1,3,5\}$

$B \times A = \{(2,1),(2,3),(2,5),(3,1),(3,3),(3,5)\} \rightarrow (2)$

ii) (1) மற்றும் (2) லிருந்து, $(1) \neq (2)$

மேலும், $A \times B \neq B \times A$ ஏனெனில் $(1,2) \neq (2,1)$

iii) $n(A) = 3$ மற்றும் $n(B) = 2$

(1) மற்றும் (2) லிருந்து, $n(A \times B) = n(B \times A) = 6 \rightarrow (3)$

இங்கு, $n(A) \times n(B) = 3 \times 2 = 6 \rightarrow (4)$

$n(B) \times n(A) = 2 \times 3 = 6 \rightarrow (5)$

(3), (4) மற்றும் (5) லிருந்து,

$$\boldsymbol{n(A \times B) = n(B \times A) = n(A) \times n(B)}$$

**எ.கா : 1.3(i)**

$A = \{x \in \mathbb{N} / 1 < x < 4\}$, $B = \{x \in \mathbb{W} / 0 \leq x < 2\}$ மற்றும் $C = \{x \in \mathbb{N} / x < 3\}$ எனில், $A \times (B \cup C) = (A \times B) \cup (A \times C)$ என்பதைச் சரிபார்க்கவும்.

**தீர்வு**:-

**தரவு**, $A = \{2,3\}$ , $B = \{0,1\}$ , $C = \{1,2\}$

**LHS:** $B \cup C = \{0,1,2\}$

$A \times (B \cup C) = \{(2,0),(2,1),(2,2),(3,0),(3,1),(3,2)\} \rightarrow$ **(1)**

**RHS:** $A \times B = \{(2,0),(2,1),(3,0),(3,1)$

$A \times C = \{(2,1),(2,2),(3,1),(3,2)$

$(A \times B) \cup (A \times C) = \{(2,0),(2,1),(2,2),(3,0),(3,1),(3,2)\} \rightarrow$ **(2)**

$\therefore$ (1) மற்றும் (2) லிருந்து $A \times (B \cup C) = (A \times B) \cup (A \times C)$ என்பது சரிபார்க்கப்பட்டது.

**எ.கா : 1.3(ii)**

$A = \{x \in \mathbb{N} / 1 < x < 4\}$, $B = \{x \in \mathbb{W} / 0 \leq x < 2\}$ மற்றும் $C = \{x \in \mathbb{N} / x < 3\}$ எனில், $A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)$ என்பதைச் சரிபார்க்கவும்.

**தீர்வு**:-

**தரவு**, $A = \{2,3\}$ , $B = \{0,1\}$ , $C = \{1,2\}$

**LHS:** $B \cap C = \{1\}$

$A \times (B \cap C) = \{(2,1),(3,1)\} \rightarrow$ **(1)**

**RHS:** $A \times B = \{(2,0),(2,1),(3,0),(3,1)\}$

$A \times C = \{(2,1),(2,2),(3,1),(3,2)\}$

$(A \times B) \cap (A \times C) = \{(2,1),(3,1)\} \rightarrow$ **(2)**

$\therefore$(1) மற்றும் (2) லிருந்து $A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)$ என்பது சரிபார்க்கப்பட்டது.

**பயிற்சி - 1.1 (4)**

$A = \{5,6\}, B = \{4,5,6\}, C = \{5,6,7\}$ எனில் $A \times A = \{(B \times B) \cap (C \times C)$ எனக் காட்டுக.

**தீர்வு**:-

**தரவு**, $A = \{5,6\}, B = \{4,5,6\}$, C= $\{5,6,7\}$

**LHS**:-

$\boldsymbol{A \times A = \{5,6\} \times \{5,6\}}$

$= \{(\mathbf{5},\mathbf{5}),(\mathbf{5},\mathbf{6}),(\mathbf{6},\mathbf{5}),(\mathbf{6},\mathbf{6})\} \rightarrow (1)$

**RHS**:-

$B \times B = \{4,5,6\} \times \{4,5,6\}$

$= \{(4,4),(4,5),(4,6),(5,4),(5,5),(5,6),(6,4),(6,5),(6,6)\}$

$C \times C = \{5,6,7\} \times \{5,6,7\}$

$= \{(5,5),(5,6),(5,7),(6,5),(6,6,),(6,7),(7,5),(7,6),(7,7)\}$

$(\boldsymbol{B \times B}) \cap (\boldsymbol{C \times C}) = \{(\mathbf{5},\mathbf{5}),(\mathbf{5},\mathbf{6}),(\mathbf{6},\mathbf{5}),(\mathbf{6},\mathbf{6})\} \rightarrow (2)$

∴ (1) மற்றும் (2) லிருந்து, $\boldsymbol{A \times A = (B \times B) \cap (C \times C)}$.

**பயிற்சி - 1.1 (5)**

$A = \{1,2,3\}$ , $B = \{2,3,5\}$, $C = \{3,4\}$ மற்றும் $D = \{1,3,5\}$ எனில், $(A \cap C) \text{ X } (B \cap D) = (A \text{ X } B) \cap (C \text{ X } D)$ என்பதைச் சரிபார்க்கவும்.

**தீர்வு**:-

**LHS**:- $A \cap C = \{3\}$

$B \cap D = \{3,5\}$

$(A \cap C) \text{ X } (B \cap D) = \{(3,3),(3,5)\} \rightarrow (1)$

**RHS**:-

$A \text{ X } B = \{(1,2),(1,3),(1,5),(2,2),(2,3),(2,5),(3,2),(3,3),(3,5)\}$

$C \text{ X } D = \{(3,1),(3,3),(3,5),(4,1),(4,3),(4,5)\}$

$(A \text{ X } B) \cap (C \text{ X } D) = \{(3,3),(3,5)\} \rightarrow (2)$

$\therefore$ (1) மற்றும் (2) லிருந்து $(A \cap C) \text{ X } (B \cap D) = (A \text{ X } B) \cap (C \text{ X } D)$ என்பது சரிபார்க்கப்பட்டது.

**பயிற்சி - 1.1 - 6(i)**

$A = \{x \in \mathbb{W} / x < 2\}$ , $B = \{x \in \mathbb{N} / 1 \leq x \leq 4\}$ மற்றும் $C = \{3,5\}$ எனில், $A \text{ X } (B \cup C) = (A \text{ X } B) \cup (A \text{ X } C)$ என்பது உண்மையா என சோதிக்கவும்.

**தீர்வு**:-

**தரவு**, $A = \{0,1\}$ , $B = \{2,3,4\}$ , $C = \{3,5\}$

**LHS**: $B \cup C = \{2,3,4,5\}$

$A \text{ X } (B \cup C) = \{(0,2),(0,3),(0,4),(0,5),(1,2),(1,3),$
$(1,4),(1,5)\} \rightarrow (1)$

**RHS**: $A \text{ X } B = \{(0,2),(0,3),(0,4),(1,2),(1,3),(1,4)\}$

$A \text{ X } C = \{(0,3),(0,5),(1,3),(1,5)\}$

$(A \text{ X } B) \cup (A \text{ X } C) = \{(0,2),(0,3),(0,4),(0,5),(1,2),$
$(1,4),(1,5)\} \rightarrow (2)$

$\therefore$ (1) மற்றும் (2) லிருந்து $A \text{ X } (B \cup C) = (A \text{ X } B) \cup (A \text{ X } C)$ என்பது சரிபார்க்கப்பட்டது.

**பயிற்சி - 1.1 - 6(ii)**

$A = \{x \in \mathbb{W} / x < 2\}$ , $B = \{x \in \mathbb{N} / 1 \leq x \leq 4\}$ மற்றும் $C = \{3,5\}$ எனில், $A \text{ X } (B \cap C) = (A \text{ X } B) \cap (A \text{ X } C)$ என்பது உண்மையா என சோதிக்கவும்.

**தீர்வு**:-

**தரவு**, $A = \{0,1\}$ , $B = \{2,3,4\}$ , $C = \{3,5\}$

**LHS**: $B \cap C = \{3\}$

$A \text{ X } (B \cap C) = \{(0,3),(1,3)\} \rightarrow \rightarrow (1)$

**RHS**: $A \text{ X } B = \{(0,2),(0,3),(0,4),(1,2),(1,3),(1,4)\}$

$A \text{ X } C = \{(0,3),(0,5),(1,3),(1,5)\}$

$(A \text{ X } B) \cap (A \text{ X } C) = \{(0,3),(1,3)\} \rightarrow (2)$

$\therefore$ (1) மற்றும் (2) லிருந்து $A \text{ X } (B \cap C) = (A \text{ X } B) \cap (A \text{ X } C)$ என்பது சரிபார்க்கப்பட்டது.

14) **பயிற்சி - 1.1 - 6(iii)**

$A = \{x \in \mathbb{W} / x < 2\}$ , $B = \{x \in \mathbb{N} / 1 \leq x \leq 4\}$ மற்றும் $C = \{3,5\}$ எனில், $(A \cup B) \text{ X } C = (A \text{ X } C) \cup (B \text{ X } C)$ என்பது உண்மையா என சோதிக்கவும்.

L.H.S $\rightarrow$ $A \times (B \cap C)$

$(B \cap C) = \{2,3,4\} \cap \{3,5\}$
$= \{3\}$

$A \times (B \cap C) = \{0,1\} \times \{3\}$
$= \{(0,3)\ (1,3)\}$ ---------------------------------- (1)

R.H.S $\rightarrow$ $(A \times B) \cap (A \times C)$

$(A \times B) = \{0,1\} \times \{2,3,4\}$
$= \{(0,2)(0,3)(0,4)\ (1,2)(1,3)(1,4)\}$

$(A \times C) = \{0,1\} \times \{3,5\}$
$= \{(0,3)(0,5)(1,3)(1,5)\}$

**பயிற்சி - 1.1 – 7(i)**

$A$ என்பது 8 - ஐ விடக் குறைவான இயல் எண்களின் கணம், $B$ என்பது 8 - ஐ விடக் குறைவான பகா எண்களின் கணம் மற்றும் $C$ என்பது இரட்டைப்படை பகா எண்களின் கணம் எனில் $(A \cap B) X C = (A X C) \cap (B X C)$ என்பதைச் சரிபார்க்கவும்.

**தீர்வு**:-

**தரவு**, $A = \{1, 2, 3, 4, 5, 6, 7\}$ , $B = \{2, 3, 5, 7\}$ , $C = \{2\}$

**LHS:** $A \cap B = \{2, 3, 5, 7\}$

$(A \cap B) X C = \{(2,2), (3,2), (5,2), (7,2)\} \rightarrow (1)$

**RHS:** $A X C = \{(1,2), (2,2), (3,2), (4,2), (5,2), (6,2), (7,2)\}$

$B X C = \{(2,2), (3,2), (5,2), (7,2)$

$(A X C) \cap (B X C) = \{(2,2), (3,2), (5,2), (7,2)\} \rightarrow (2)$

$\therefore$ (1) மற்றும் (2) லிருந்து $(A \cap B) X C = (A X C) \cap (B X C)$ என்பது சரிபார்க்கப்பட்டது.

**பயிற்சி - 1.1 – 7(ii)**

$A$ என்பது 8 - ஐ விடக் குறைவான இயல் எண்களின் கணம், $B$ என்பது 8 - ஐ விடக் குறைவான பகா எண்களின் கணம் மற்றும் $C$ என்பது இரட்டைப்படை பகா எண்களின் கணம் எனில் $A X (B - C) = (A X B) - (A X C)$ என்பதைச் சரிபார்க்கவும்.

**தீர்வு**:-

**தரவு**, $A = \{1, 2, 3, 4, 5, 6, 7\}$, $B = \{2, 3, 5, 7\}$, $C = \{2\}$

**LHS:** $B - C = \{3, 5, 7\}$

$A X (B - C) = \{(1,3), (1,5), (1,7), (2,3), (2,5), (2,7), (3,3), (3,5),$
$(3,7), (4,3), (4,5), (4,7), (5,3), (5,5), (5,7), (6,3),$
$(6,5), (6,7), (7,3), (7,5), (7,7)\} \rightarrow (1)$

**RHS:**

$A X B = \{(1,2), (1,3), (1,5), (1,7), (2,2), (2,3), (2,5), (2,7), (3,2),$
$(3,3), (3,5), (3,7), (4,2), (4,3), (4,5), (4,7), (5,2), (5,3),$
$(5,5), (5,7), (6,2), (6,3), (6,5), (6,7), (7,2), (7,3), (7,5), (7,7)\}$

$A X C = \{(1,2), (2,2), (3,2), (4,2), (5,2), (6,2), (7,2)\}$

$(A \times B) \cap (A \times C) = \{(0,2)(0,3)(0,4)\ (1,2)(1,3)(1,4)\} \cap \{(0,3)(0,5)(1,3)(1,5)\}$
$= \{(0,3)\ (1,3)\}$ ---------------------------- ②

① மற்றும் ② லிருந்து L.H.S = R.H.S எனவே
$A \times (B \cap C) = (A \times B) \cap (A \times C)$

**பயிற்சி - 1.2 – 4(i)**

$\{(x, y) / x = 2y, x \in \{2, 3, 4, 5\}, y \in \{1, 2, 3, 4\}\}$ என்ற உறவை (i) அம்புக்குறிப்படம் (ii) வரைபடம் (iii) பட்டியல் முறையில் குறிக்க.

**தீர்வு**:-

**தரவு**, $\{(x, y) | x = 2y, x \in \{2,3,4.5\}, y = \{1,2,3,4\}\}$

$y = 1$ எனில் $x = 2 \times 1 = 2$ $\quad$ $y = 2$ எனில் $x = 2 \times 2 = 4$

$y = 3$ எனில் $x = 2 \times 3 = 6$ $\quad$ $y = 4$ எனில் $x = 2 \times 4 = 8$

(i) **அம்புகுறிபடம்**:-




(ii) **வரைபடம்**:-




(iii) **பட்டியல்முறை**:-

$R = \{(2,1), (4,2)\}$

6) **பயிற்சி - 1.2 – 4(ii)**

$\{(x, y) / y = x + 3, x, y$ ஆகியவை இயல் எண்கள் $< 10\}$ என்ற உறவை (i) அம்புக்குறிப்படம் (ii) வரைபடம் (iii) பட்டியல் முறையில் குறிக்க.

**தீர்வு**:-

**தரவு**, $\{(x, y) | y = x + 3, x, y$ ஆகியவை இயல் எண்கள் $< 10\}$.

$X = \{1,2,3,4,5,6,7,8,9\}$

$x = 1 \rightarrow y = 1 + 3 = 4$ $\quad$ $x = 2 \rightarrow y = 2 + 3 = 5$ $\quad$ $x = 3 \rightarrow y = 3 + 3 = 6$

$x = 4 \rightarrow y = 4 + 3 = 7$ $\quad$ $x = 5 \rightarrow y = 5 + 3 = 8$ $\quad$ $x = 6 \rightarrow y = 6 + 3 = 9$

$x = 7 \rightarrow y = 7 + 3 = 10$ $\quad$ $x = 8 \rightarrow y = 8 + 3 = 11$ $\quad$ $x = 9 \rightarrow y = 9 + 3 = 12$

(i) **அம்புக்குறிபடம்:-**



(ii) **வரைபடம்:-**



(iii) **பட்டியல்முறை:-**

$R = \{(1,4)), (2,5), (3,6), (4,7), (5,8), (6,9)\}$

## 2.எண்களும் தொடர்வரிசைகளும்

### பயிற்சி 2.2

9) முதல் 10 இயல் எண்களால் மீதியின்றி வகுபடக்கூடிய சிறிய எண் எது?

**தீர்வு:-**

முதல் 10 இயல் எண்கள் : $1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10.$

முதல் 10 இயல் எண்களால் மீதியின்றி வகுபடக்கூடிய சிறிய எண்ணானது, 1 முதல் 10 வரையுள்ள எண்களின் மீ.பொ.ம ஆகும்.

| | |
|---|---|
| 2 | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 |
| 2 | 1, 1, 3, 2, 5, 3, 7, 4, 9, 5 |
| 2 | 1, 1, 3, 1, 5, 3, 7, 2, 9, 5 |
| 3 | 1, 1, 3, 1, 5, 3, 7, 1, 9, 5 |
| 3 | 1, 1, 1, 1, 5, 1, 7, 1, 3, 5 |
| 5 | 1, 1, 1, 1, 5, 1, 7, 1, 1, 5 |
| 7 | 1, 1, 1, 1, 1, 1, 7, 1, 1, 1 |
| | 1, 1, 1, 1, 1, 1, 1, 1, 1, 1 |

∴ மீ.பொ.ம

$= 2^3 \times 3^2 \times 5 \times 7$

$= 8 \times 9 \times 35$

$= 72 \times 35$

$= 2520$

∴ மிகச் சிறிய எண் $= 2520$

### பயிற்சி 2.4

6) $a_1 = 1, a_2 = 1, a_n = 2a_{n-1} + a_{n-2}$ , $n \geq 3, n \in \mathbb{N}$ எனில், தொடர்வரிசையின் முதல் ஆறு உறுப்புகளைக் காண்க.

**தீர்வு:-**

$a_1 = 1$

$a_2 = 1$

$a_n = 2a_{n-1} + a_{n-2}$ , $n \geq 3, n \in \mathbb{N}$

$a_3 = 2a_{3-1} + a_{3-2} = 2a_2 + a_1 = 2(1) + 1 = 2 + 1 = 3$

$a_4 = 2a_{4-1} + a_{4-2} = 2a_3 + a_2 = 2(3) + 1 = 6 + 1 = 7$

$a_5 = 2a_{5-1} + a_{5-2} = 2a_4 + a_3 = 2(7) + 3 = 14 + 3 = 17$

$a_6 = 2a_{6-1} + a_{6-2} = 2a_5 + a_4 = 2(17) + 7 = 34 + 7 = 41$

எனவே, தொடர்வரிசையின் முதல் ஆறு உறுப்புகள்,

$1, 1, 3, 7, 17, 41$

எ.கா : 2.27 ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் 7 –வது உறுப்பு −1 மற்றும் 16 –வது உறுப்பு 17 எனில், அதன் பொது உறுப்பைக் காண்க.

**தீர்வு:-**

WKT, $n$ − வது உறுப்பு, $t_n = a + (n-1)d$

தரவு, $t_7 = -1$ மற்றும் $t_{16} = 17$

$\Rightarrow \quad a + 6d = -1 \quad \rightarrow (1)$ மற்றும் $a + 15d = 17 \quad \rightarrow (2)$

சமன்பாடுகள் (1) மற்றும் (2) -ஐத் தீர்க்க,

$(1) \quad : \quad a + 6d = -1$

$(2) \quad : \quad a + 15d = 17$

$(-) \; (-) \; (-)$

$(1) - (2) \quad : \quad 6d - 15d = -1 - 17$

$$-9d = -18$$

$$d = \frac{-18}{-9}$$

$$d = 2$$

$d = 2$ -ஐ சமன்பாடு (1) இல் பிரதியட,

$$a + 6(2) = -1$$

$$a + 12 = -1$$

$$a = -1 - 12$$

$$a = -13$$

∴ பொது உறுப்பு $= t_n$

$$= a + (n-1)d$$

$$= -13 + (n-1)(2)$$

$$= -13 + 2n - 2$$

$$= 2n - 15$$

<u>எ.கா : 2.29</u> ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் அடுத்தடுத்த நான்கு உறுப்புகளின் கூடுதல் 28 மற்றும் அவற்றின் வர்க்கங்களின் கூடுதல் 276 எனில் அந்த எண்களைக் காண்க.

**<u>தீர்வு</u>:-**

ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் அடுத்தடுத்த நான்கு உறுப்புகளை முறையே $a - 3d$ , $a - d$ , $a + d$, $a + 3d$ என்க.

**<u>தரவு</u>,** அடுத்தடுத்த நான்கு உறுப்புகளின் கூடுதல் $= 28$

$$a - 3d + a - d + a + d + a + 3d = 28$$

$$4a = 28$$

$$a = \frac{28}{4}$$

$$a = 7$$

**<u>தரவு</u>,** நான்கு உறுப்புகளின் வர்க்கங்களின் கூடுதல் $= 276$

$$(a - 3d)^2 + (a - d)^2 + (a + d)^2 + (a + 3d)^2 = 276$$

$$a^2 + (3d)^2 - 2(a)(3d) + a^2 + d^2 - 2ad + a^2 + d^2 + 2ad + a^2 + (3d)^2 + 2(a)(3d) = 276$$

$$a^2 + 9d^2 - 6ad + a^2 + d^2 - 2ad + a^2 + d^2 + 2ad + a^2 + 9d^2 + 6ad = 276$$

$$4a^2 + 20d^2 = 276$$

$$4(7)^2 + 20d^2 = 276$$

$$4(49) + 20d^2 = 276$$

$$196 + 20d^2 = 276$$

$$20d^2 = 276 - 196$$

$$20d^2 = 80$$

$$d^2 = \frac{80}{20}$$

$$d^2 = 4$$

$$d = \pm 2$$

(i) $a = 7$ மற்றும் $d = 2$ எனில் தேவையான நான்கு எண்கள்,

$7 - 3(2),\quad 7 - 2,\quad 7 + 2,\quad 7 + 3(2)$

$7 - 6,\quad 5,\quad 9,\quad 7 + 6$

$1,\quad 5,\quad 9,\quad 13$

(ii) $a = 7$ மற்றும் $d = -2$ எனில் தேவையான நான்கு எண்கள்,

$7 - 3(-2),\quad 7 - (-2),\quad 7 + (-2),\quad 7 + 3(-2)$

$7 + 6,\quad 7 + 2,\quad 7 - 2,\quad 7 - 6$

$13,\quad 9,\quad 5,\quad 1$

## பயிற்சி 2.5

11) ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் அடுத்தடுத்த மூன்று உறுப்புகளின் கூடுதல் 27 மற்றும் அவற்றின் பெருக்கற்பலன் 288 எனில் அந்த எண்களைக் காண்க.

**தீர்வு**:-

ஒரு கூட்டுத்தொடர்வரிசையின் அடுத்தடுத்த மூன்று உறுப்புகள் முறையே $a-d, a, a+d$ என்க.

**தரவு**, $a-d+a+a+d = 27$

$$3a = 27$$

$$a = \frac{27}{3}$$

$$a = 9$$

**தரவு**, $(a-d) \text{ x } a \text{ x } (a+d) = 288$

$$(a^2-d^2) \text{ x } a = 288$$

$$(9^2-d^2) \text{ x } 9 = 288$$

$$81-d^2 = \frac{288}{9}$$

$$81-d^2 = 32$$

$$81-32 = d^2$$

$$49 = d^2$$

$$d = \pm 7$$

$\Rightarrow a = 9$ மற்றும் $d = \pm 7$

(i) $a = 9$ மற்றும் $d = 7$ எனும் போது கூட்டுத்தொடர்வரிசையின் மூன்று எண்கள்,

$9-7,\quad 9,\quad 9+7$

$2,\quad 9,\quad 16$

$a = 9$ மற்றும் $d = -7$ எனும் போது கூட்டுத்தொடர்வரிசையின் மூன்று எண்கள்

$9-7,\ 9,\ 9+(-7)$

$9+7,\quad 9,\quad 9-7$

$16,\quad 9,\quad 2$

12) ஒரு கூட்டுத் தொடர்வரிசையின் 6 -வது மற்றும் 8 -வது உறுப்புகளின் $7:9$ எனில், 9 -வது மற்றும் 13 -வது உறுப்புகளின் விகிதம் காண்க. [GMQ]

**தீர்வு**:-

**WKT**, $t_n = a+(n-1)d$

| **தரவு**, 6-வது மற்றும் 8-வது | 9-வது மற்றும் 13-வது |
|---|---|
| உறுப்புகளின் விகிதம் $= 7:9$ | உறுப்புகளின் விகிதம், |
| $\Rightarrow\quad t_6 : t_8 = 7:9$ | $= t_9 : t_{13}$ |
| $\frac{t_6}{t_8} = \frac{7}{9}$ | $= \frac{t_9}{t_{13}}$ |
| $\frac{a+5d}{a+7d} = \frac{7}{9}$ | $= \frac{a+8d}{a+12d}$ |
| $9(a+5d) = 7(a+7d)$ | $= \frac{2d+8d}{2d+12d}$ |
| $9a+45d = 7a+49d$ | $= \frac{10d}{14d}$ |
| $9a-7a = 49d-45d$ | $= \frac{5}{7}$ |
| $2a = 4d$ | $= 5:7$ |
| $a = 2d \longrightarrow (1)$ | |

13) ஒரு குளிர்காலத்தில் திங்கள்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை ஊட்டியில் வெப்பநிலை கூட்டுத் தொடர்வரிசையில் உள்ளன. திங்கள் கிழமை முதல் புதன் கிழமை வரை உள்ள வெப்பநிலைகளின் கூடுதல் $0^oC$ மற்றும் புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை உள்ள வெப்பநிலைகளின் கூடுதல் $18^oC$ எனில், ஐந்து நாட்களின் வெப்பநிலைகளைக் காண்க.

**தீர்வு**:-

திங்கள் கிழமை முதல் புதன் கிழமை வரையிலான வெப்பநிலைகள் முறையே $a, a+d, a+2d, a+3d, a+4d$ என்க.

**தரவு**, திங்கள் கிழமை முதல் புதன் கிழமை வரை உள்ள வெப்பநிலைகளின் கூடுதல் $= 0^oC$

வெப்பநிலைகளின் கூடுதல் $= 18^{o}C$

$$a + 2d + a + 3d + a + 4d = 18$$
$$3a + 9d = 18$$
$$3(-d) + 9d = 18$$
$$-3d + 9d = 18$$
$$6d = 18$$
$$d = \frac{18}{6}$$
$$d = 3$$

$d = 3$ எனில், $a = -d = -3$

எனவே, திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரையிலான வெப்பநிலைகள், $a, a+d, a+2d, a+3d, a+4d$

$\Rightarrow -3, -3+3, -3+2(3), -3+3(3), -3+4(3)$

$\Rightarrow -3, \quad 0, \quad -3+6, \quad -3+9, \quad -3+12$

$\Rightarrow -3, \quad 0, \quad 3, \quad 6, \quad 9$

$\Rightarrow -3^{o}C, \quad 0^{o}C, \quad 3^{o}C, \quad 6^{o}C, \quad 9^{o}C$

## 3.இயற்கணிதம்

**எடுத்துக்காட்டு 3.11** $6x^3 - 30x^2 + 60x - 48$ மற்றும் $3x^3 - 12x^2 + 21x - 18$ ஆகிய பல்லுறுப்புக் கோவைகளின் மீ.பொ.வ காண்க.

**தீர்வு** $f(x) = 6x^3 - 30x^2 + 60x - 48 = 6(x^3 - 5x^2 + 10x - 8)$

$g(x) = 3x^3 - 12x^2 + 21x - 18 = 3(x^3 - 4x^2 + 7x - 6)$

$$\begin{array}{r|l l} & 1 & \\ x^3 - 5x^2 + 10x - 8 & x^3 - 4x^2 + 7x - 6 & \\ & x^3 - 5x^2 + 10x - 8 & (-) \\ \hline & x^2 \quad - 3x + 2 & \end{array}$$

$$\begin{array}{r|l l} & x - 2 & \\ x^2 - 3x + 2 & x^3 - 5x^2 + 10x - 8 & \\ & x^3 - 3x^2 + 2x & (-) \\ \hline & -2x^2 + 8x - 8 & \\ & -2x^2 + 6x - 4 & (-) \\ \hline & 2x - 4 & \end{array}$$

$$= 2(x - 2)$$

$$\begin{array}{r|l l} & x - 1 & \\ x - 2 & x^2 - 3x + 2 & \\ & x^2 - 2x & (-) \\ \hline & -x + 2 & \\ & -x + 2 & (-) \\ \hline & 0 & \end{array}$$

இங்கு, மீதி பூச்சியம் ஆகும்.

3 மற்றும் 6 –ன் மீ.பொ.வ 3 ஆகும்.

எனவே, மீ.பொ.வ $\left[(6x^3 - 30x^2 + 60x - 48,\ 3x^3 - 12x^2 + 21x - 18)\right] = 3(x-2)$.

**எடுத்துக்காட்டு 3.18** சுருக்குக $\frac{1}{x^2 - 5x + 6} + \frac{1}{x^2 - 3x + 2} - \frac{1}{x^2 - 8x + 15}$

**தீர்வு** $\frac{1}{x^2 - 5x + 6} + \frac{1}{x^2 - 3x + 2} - \frac{1}{x^2 - 8x + 15}$

$$= \frac{1}{(x-2)(x-3)} + \frac{1}{(x-2)(x-1)} - \frac{1}{(x-5)(x-3)}$$

$$= \frac{(x-1)(x-5) + (x-3)(x-5) - (x-1)(x-2)}{(x-1)(x-2)(x-3)(x-5)}$$

$$= \frac{(x^2 - 6x + 5) + (x^2 - 8x + 15) - (x^2 - 3x + 2)}{(x-1)(x-2)(x-3)(x-5)}$$

$$= \frac{x^2 - 11x + 18}{(x-1)(x-2)(x-3)(x-5)} = \frac{(x-9)(x-2)}{(x-1)(x-2)(x-3)(x-5)}$$

$$= \frac{x-9}{(x-1)(x-3)(x-5)}$$

## பயிற்சி 3.6

5. $A = \frac{2x+1}{2x-1}$ மற்றும் $B = \frac{2x-1}{2x+1}$ எனில், $\frac{1}{A-B} - \frac{2B}{A^2-B^2}$ காண்க.

$A = \frac{2x+1}{2x-1}$ , $B = \frac{2x-1}{2x+1}$

$$\frac{1}{A-B} - \frac{2B}{A^2-B^2} = ?$$

$$\frac{1}{A-B} - \frac{2B}{A^2-B^2} = \frac{1}{A-B} - \frac{2B}{(A+B)(A-B)}$$

$$= \frac{(A+B)}{(A-B)(A+B)} - \frac{2B}{(A+B)(A-B)}$$

$$= \frac{A+B-2B}{(A-B)(A+B)} = \frac{A-B}{(A-B)(A+B)}$$

$$= \frac{1}{(A+B)}$$

$$= \frac{1}{\frac{2x+1}{2x-1} + \frac{2x-1}{2x+1}}$$

$$= \frac{1}{\frac{(2x+1)(2x+1)}{(2x-1)} + \frac{(2x-1)(2x-1)}{(2x+1)}}$$

$$= \frac{1}{\frac{(2x+1)^2+(2x-1)^2}{(2x-1)(2x+1)}} = \frac{1}{\frac{4x^2+4x+1+4x^2-4x+1}{(2x)^2-1^2}} = \frac{1}{\frac{8x^2+2}{4x^2-1}}$$

$$= \frac{4x^2-1}{8x^2+2}$$

$$= \frac{4x^2-1}{2(4x^2+1)}$$

**எடுத்துக்காட்டு 3.21** $64x^4 - 16x^3 + 17x^2 - 2x + 1$ என்பதின் வர்க்கமூலம் காண்க.

**தீர்வு**

| | | |
|---|---|---|
| | $8x^2 - x + 1$ | |
| $8x^2$ | $64x^4 - 16x^3 + 17x^2 - 2x + 1$ | |
| | $64x^4$ | (–) |
| $16x^2 - x$ | $-16x^3 + 17x^2$ | |
| | $-16x^3 + x^2$ | (–) |
| $16x^2 - 2x + 1$ | $16x^2 - 2x + 1$ | |
| | $16x^2 - 2x + 1$ | (–) |
| | $0$ | |

எனவே, $\sqrt{64x^4 - 16x^3 + 17x^2 - 2x + 1} = |8x^2 - x + 1|$

**எடுத்துக்காட்டு 3.22** $9x^4 + 12x^3 + 28x^2 + ax + b$ ஆனது ஒரு முழுவர்க்கம் எனில், $a$, $b$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.

**தீர்வு**

| | | |
|---|---|---|
| | $3x^2 + 2x + 4$ | |
| $3x^2$ | $9x^4 + 12x^3 + 28x^2 + ax + b$ | |
| | $9x^4$ | (–) |
| $6x^2 + 2x$ | $12x^3 + 28x^2$ | |
| | $12x^3 + 4x^2$ | (–) |
| $6x^2 + 4x + 4$ | $24x^2 + ax + b$ | |
| | $24x^2 + 16x + 16$ | (–) |
| | $0$ | |

கொடுக்கப்பட்ட பல்லுறுப்புக்கோவை ஒரு முழுவர்க்கம் என்பதால், $a - 16 = 0$, $b - 16 = 0$

எனவே, $a = 16$, $b = 16$.

**பயிற்சி 3.8 –1(i)**

$x^4 - 12x^3 + 42x^2 - 36x + 9$ என்பதன் வர்க்கமூலம் காண்க

| | $x^2 - 6x + 3$ |
|---|---|
| $x^2$ | $x^4 - 12x^3 + 42x^2 - 36x + 9$ |
| | $x^4$ |
| $2x^2 - 6x$ | $-12x^3 + 42x^2$ |
| | $-12x^3 + 36x^2$ |
| $2x^2 - 12x + 3$ | $+6x^2 - 36x + 9$ |
| | $+6x^2 - 36x + 9$ |
| | $0$ |

$\therefore \sqrt{x^4 - 12x^3 + 42x^2 - 36x + 9} = |x^2 - 6x + 3|$

**பயிற்சி 3.8 –1(ii)**

$37x^2 - 28x^3 + 4x^4 + 42x + 9$ என்பதன் வர்க்கமூலம் காண்க

$37x^2 - 28x^3 + 4x^4 + 42x + 9 = 4x^4 - 28x^3 + 37x^2 + 42x + 9$

| | $2x^2 - 7x - 3$ |
|---|---|
| $2x^2$ | $4x^4 - 28x^3 + 37x^2 + 42x + 9$ |
| | $4x^4$ |
| $4x^2 - 7x$ | $-28x^3 + 37x^2$ |
| | $-28x^3 + 49x^2$ |
| $4x^2 - 14x - 3$ | $-12x^2 + 42x + 9$ |
| | $-12x^2 + 42x + 9$ |
| | $0$ |

$\therefore \sqrt{4x^4 - 28x^3 + 37x^2 + 42x + 9} = |2x^2 - 7x - 3|$

**பயிற்சி 3.8 –1(iii)**

$16x^4 + 8x^2 + 1$ என்பதன் வர்க்கமூலம் காண்க

$16x^4 + 8x^2 + 1 = 16x^4 + 0x^3 + 8x^2 + 0x + 1$

| | $4x^2 + 0x + 1$ |
|---|---|
| $4x^2$ | $16x^4 + 0x^3 + 8x^2 + 0x + 1$ |
| | $16x^4$ |
| $8x^2 + 0x$ | $+0x^3 + 8x^2$ |
| | $+0x^3 + 0x^2$ |
| $8x^2 + 0x + 1$ | $+8x^2 + 0x + 1$ |
| | $+8x^2 + 0x + 1$ |
| | $0$ |

$\therefore \sqrt{16x^4 + 0x^3 + 8x^2 + 0x + 1} = |4x^2 + 1|$

**பயிற்சி 3.8 –1(iv)**

$121x^4 - 198x^3 - 183x^2 + 216x + 144$ என்பதன் வர்க்கமூலம் காண்க

| | $11x^2 - 9x - 12$ |
|---|---|
| $11x^2$ | $121x^4 - 198x^3 - 183x^2 + 216x + 144$ |
| | $121x^4$ |
| $22x^2 - 9x$ | $-198x^3 - 183x^2$ |
| | $-198x^3 + 81x^2$ |
| $22x^2 - 18x - 12$ | $-264x^2 + 216x + 144$ |
| | $-264x^2 + 216x + 144$ |
| | $0$ |

$\therefore \sqrt{121x^4 - 198x^3 - 183x^2 + 216x + 144} = \mathbf{11x^2 - 9x - 12}$

**பயிற்சி 3.8 –3(ii)**

$x^4 - 8x^3 + mx^2 + nx + 16$ என்பது முழுவர்க்க பல்லுறுப்புக்கோவை எனில் $a$ மற்றும் $b$-யின் மதிப்பு காண்க

| | $x^2 - 4x + 4$ |
|---|---|
| $x^2$ | $x^4 - 8x^3 + mx^2 + nx + 16$ |
| | $x^4$ |
| $2x^2 - 4x$ | $-8x^3 + mx^2$ |
| | $-8x^3 + 16x^2$ |
| $2x^2 - 8x + 4$ | $(m-16)x^2 + nx + 16$ |
| | $8x^2 - 32x + 16$ |
| | 0 |

∴ கொடுக்கப்பட்ட பல்லுறுப்புக்கோவை முழுவர்க்கம் என்பதால்

$m - 16 = 8 \Longrightarrow m = 8 + 16 = 24$

மற்றும் $n = -32$

**பயிற்சி 3.8 –3(i)**

(i) $36x^4 - 60x^3 + 61x^2 - mx + n$

$36x^4 - 60x^3 + 61x^2 - mx + n$

| | $6x^2 - 5x + 3$ |
|---|---|
| $6x^2$ | $36x^4 - 60x^3 + 61x^2 - mx + n$ |
| | $36x^4$ |
| $12x^2 - 5x$ | $-60x^3 + 61x^2$ |
| | $-60x^3 + 25x^2$ |
| $12x^2 - 10x + 3$ | $36x^2 - mx + n$ |
| | $36x^2 - 30x + 9$ |
| | $(-m+30)x + n - 9$ |

கொடுக்கப்பட்ட பல்லுறுப்புக்கோவை முழுவர்க்கம் என்பதால்

$-m + 30 = 0$ , $n - 9 = 0$

$m = 30$ , $n = 9$

**பயிற்சி 3.8 –2(ii)**

$ax^4 + bx^3 + 361x^2 + 220x + 100$ என்பது முழுவர்க்க பல்லுறுப்புக்கோவை எனில் $a$ மற்றும் $b$-யின் மதிப்பு காண்க

| | $10 + 11x + 12x^2$ |
|---|---|
| 10 | $100 + 220x + 361x^2 + bx^3 + ax^4$ |
| | 100 |
| $20 + 11x$ | $+220x + 361x^2$ |
| | $+220x + 121x^2$ |
| $20 + 22x + 12x^2$ | $+240x^2 + bx^3 + ax^4$ |
| | $+240x^2 + 264x^3 + 144x^4$ |
| | 0 |

∴ கொடுக்கப்பட்ட பல்லுறுப்புக்கோவை முழுவர்க்கம் என்பதால்

$a = 144$ , $b = 264$

**பயிற்சி 3.8 –2(i)**

$4x^4 - 12x^3 + 37x^2 + bx + a$ என்பது முழுவர்க்க பல்லுறுப்புக்கோவை எனில் $a$ மற்றும் b-யின் மதிப்பு காண்க

| | $2x^2 - 3x + 7$ |
|---|---|
| $2x^2$ | $4x^4 - 12x^3 + 37x^2 + bx + a$ |
| | $4x^4$ |
| $4x^2 - 3x$ | $-12x^3 + 37x^2$ |
| | $-12x^3 + 9x^2$ |
| $4x^2 - 6x + 7$ | $+28x^2 + bx + a$ |
| | $+28x^2 - 42x + 49$ |
| | 0 |

∴ கொடுக்கப்பட்ட பல்லுறுப்புக்கோவை முழுவர்க்கம் என்பதால்

$a - 49 = 0$ மற்றும் $b + 42 = 0$

$a = 49$ $b = -42$

## பயிற்சி 3.12 –3

3. ஒரு பேருந்து 90கி.மீ தொலைவைச் சீரான வேகத்தில் கடக்கிறது. அதன் வேகம் 15 கி.மீ/ மணி அதிகரிக்கப்பட்டால், பயண நேரம் 30 நிமிடங்கள் குறைகிறது எனில், பேருந்தின் வேகத்தைக் கணக்கிடுக.

பேருந்து கடந்த தொலைவு $= 90$ கி.மீ

பேருந்தின் உண்மையான வேகம் $= s$ கி.மீ / மணி என்க

அதிகரிக்கப்பட்ட பின்னர் வேகம் $= s + 15$ கி.மீ / மணி

வேகம் $= \dfrac{\text{கடந்த தொலைவு}}{\text{நேரம்}}$

நேரம் $= \dfrac{\text{கடந்த தொலைவு}}{\text{வேகம்}}$

நேரம் $= \dfrac{90}{s}$

வேகம் 15 கி.மீ/மணி அதிகரிக்கப்பட்ட பின்னர் நேரம் $= \dfrac{90}{s+15}$

கொடுக்கப்பட்டது $\dfrac{90}{s} - \dfrac{90}{s+15} = \dfrac{1}{2}$ மணி

$$90 \times \left(\frac{1}{s} - \frac{1}{s+15}\right) = \frac{1}{2}$$

$$90 \times \left(\frac{s+15-s}{s\times(s+15)}\right) = \frac{1}{2}$$

$$90 \times 2 \times \left(\frac{15}{s^2+15s}\right) = 1$$

$$90 \times 2 \times 15 = s^2 + 15s$$
$$2700 = s^2 + 15s$$
$$0 = s^2 + 15s - 2700$$

$s^2 + 15s - 2700 = 0$ இதை காரணிபடுத்த

$(s+60)(s-45) = 0$

$(s+60) = 0$ அல்லது $(s-45) = 0$

$\therefore\ s = -60$ $\qquad s = 45$

வேகம் என்பது எப்போதும் மிகை எனவே $s = -60$ என்பது பொருந்தாது

$\therefore$ பேருந்தின் உண்மையான வேகம் $= 45$ கி.மீ / மணி

## 1.அடிப்படை விகிதசம் தேற்றம் (அ) தேல்ஸ் தேற்றம்.

**கூற்று:** ஒரு நேர்கோடு முக்கோணத்தின் ஒரு பக்கத்திற்கு இணையாகவும் மற்ற இரு பக்கங்களை வெட்டுமாறு வரையப்பட்டால் அக்கோடு அவ்விரு பக்கங்களையும் சம விகிதத்தில் பிரிக்கும்.

**தரவு:** ΔABC ல், AB மீது புள்ளி D, AC மீது புள்ளி E உள்ளது.

**நிரூபிக்க:** $\dfrac{AD}{DB} = \dfrac{AE}{EC}$




**அமைப்பு:** DE ∥ BC வரைக.

| | கூற்று | காரணம் |
|---|---|---|
| 1 | ∠ABC = ∠ADE = ∠1. | ஒத்த கோணங்கள் சமம். |
| 2 | ∠ACB = ∠AED = ∠2 | ஒத்த கோணங்கள் சமம். |
| 3 | ∠DAE = ∠BAC = ∠3 | இருமுக்கோணமும் பொதுகோணம் பெற்றுள்ளது. |
| 4 | ΔABC ~ ΔADE | AAA விதிமுறைப்படி |
| 5 | $\dfrac{AB}{AD} = \dfrac{AC}{AE}$ | ஒத்த பக்கங்கள் விகிதசமம். |
| 6 | $\dfrac{AD+DB}{AD} = \dfrac{AE+EC}{AE}$ | தரவு அடிப்படையில். |
| 7 | $1+\dfrac{DB}{AD} = 1+\dfrac{EC}{AE}$ | சுருக்குதல். |
| 8 | $\dfrac{DB}{AD} = \dfrac{EC}{AE}$ | இருபுறமும் 1 ஐ நீக்குதல் |
| 9 | $\dfrac{AD}{DB} = \dfrac{AE}{EC}$ | தலைகீழாக மாற்றுக தேற்றம் நிரூபிக்கப்பட்டது |

## கோண இருசமவெட்டி தேற்றம்

கூற்று: ஒரு முக்கோணத்தின் ஒரு கோணத்தின் உட்புற இருசமவெட்டியானது அக்கோணத்தின் எதிர் பக்கத்தை உட்புறமாக அக்கோணத்தினை அடங்கிய பக்கங்களின் விகிதத்தில் பிரிக்கும்.

தரவு: $\Delta ABC$ ல், AD யானது $\angle A$ ன் உட்புற இருசமவெட்டி.

நிரூபிக்க: $\frac{AB}{AC} = \frac{BD}{CD}$

அமைப்பு: AB ‖ EC வரைக.

AD ஐ E வரை வரைக.




| | கூற்று | காரணம் |
|---|---|---|
| 1 | $\angle AEC = \angle BAE = \angle 1$ | ஒன்றுவிட்ட கோணம் சமம் |
| 2 | $\Delta$ ACE சமபக்க முக்கோணம். | $\angle CAE = \angle CEA$ |
| | AC = CE ------------(1) | |
| 3 | $\Delta ABD \sim \Delta ECD$ | AA விதிமுறைப்படி |
| | $\frac{AB}{CE} = \frac{BD}{CD}$ | |
| 4 | $\frac{AB}{AC} = \frac{BD}{CD}$ | (1) லிருந்து AC = CE<br>தேற்றம் நிரூபிக்கப்பட்டது. |

## பிதாகரஸ் தேற்றம்

கூற்று: ஒரு செங்கோணமுக்கோத்தில் கர்ணத்தின் வர்க்கம் மற்ற இரு பக்கங்களின் வர்கங்களின் கூடுதலுக்கு சமம.

நிரூபணம்:

தரவு: $\Delta ABC$ ல் $\angle A = 90'$

நிரூபிக்க: $AB^2 + AC^2 = BC^2$

அமைப்பு: AD ⊥ BC வரைக.




| | கூற்று | காரணம் |
|---|---|---|
| 1 | $\Delta ABC$, $\Delta ABD$ ல் | $\angle BAC = 90'$ |
| | $\angle B$ பொதுவானது | $\angle BDA = 90'$ |
| | $\angle BAC = \angle BDA = 90'$ | |
| | $\Delta ABC \sim \Delta ABD$ | AA விதிமுறைபடி |
| | $\frac{AB}{BD} = \frac{BC}{AB}$ | |
| | $AB^2 = BC \times BD$ ————(1) | |
| 2. | $\Delta ABC$, $\Delta ADC$ ல் | $\angle BAC = 90'$ |
| | $\angle C$ பொதுவானது. | $\angle ADC = 90'$ |
| | $\angle BAC = \angle ADC = 90'$ | |
| | $\Delta ABC \sim \Delta ADC$ | AA விதிமுறைபடி |
| | $\frac{BC}{AC} = \frac{AC}{DC}$ | |
| | $AC^2 = BC \times DC$ ————(2) | |

(1)+(2) ==> $AB^2 + AC^2 = BC \times BD + BC \times DC$

$= BC\ (BD+DC)$

$= BC(BC)$

$AB^2 + AC^2 = BC^2$ தேற்றம் நிரூபிக்கப்பட்டது.

# 5.ஆயத்தொலை வடிவியல்

**எ.கா: 5.6** $(8,6),(5,11),(-5,12)$ மற்றும் $(-4,3)$ ஆகிய புள்ளிகளை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பைக் காண்க.

**தீர்வு:-**

**தரவு,**

$(x_1, y_1) = (8,6)$

$(x_2, y_2) = (5,11)$

$(x_3, y_3) = (-5,12)$

$(x_4, y_4) = (-4,3)$




நாற்கரத்தின் பரப்பு $= \frac{1}{2}\begin{Bmatrix} x_1 & x_2 & x_3 & x_4 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_4 & y_1 \end{Bmatrix}$

$= \frac{1}{2}\begin{Bmatrix} 8 & 5 & -5 & -4 & 8 \\ 6 & 11 & 12 & 3 & 6 \end{Bmatrix}$

$= \frac{1}{2}(88 + 60 - 15 - 24 - 30 + 55 + 48 - 24)$

$= \frac{1}{2}(251 - 93)$

$= \frac{158}{2}$

$= 79$ சதுர அலகுகள்

## பயிற்சி 5.1

3) வரிசையில் அமைந்த முக்கோணத்தின் முனைப் புள்ளிகளும், அதன் பரப்பளவுகளும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. $'p'$ – யின் மதிப்பைக் காண்க.

| எண் | முனைப்புள்ளிகள் | பரப்பு (சதுர அலகில்) |
|---|---|---|
| (i) | $(0,0),(p,8),(6,2)$ | 20 |

(i) **தரவு,**

$(x_1, y_1) = (0,0)$

$(x_2, y_2) = (p,8)$

$(x_3, y_3) = (6,2)$

முக்கோணத்தின் பரப்பு $= 20$ ச.அ

**WKT**, முக்கோணத்தின் பரப்பு $= \frac{1}{2}\begin{Bmatrix} x_1 & x_2 & x_3 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_1 \end{Bmatrix}$

$20 = \frac{1}{2}\begin{Bmatrix} 0 & p & 6 & 0 \\ 0 & 8 & 2 & 0 \end{Bmatrix}$

$20 \times 2 = 0 + 2p + 0 - 0 - 48 - 0$

$40 = 2p - 48$

$40 + 48 = 2p$

$88 = 2p$

$\frac{88}{2} = p$

$p = 44$

5) கொடுக்கப்பட்ட புள்ளிகளை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பைக் காண்க.

(i) $(-9,-2),(-8,-4),(2,2)$ மற்றும் $(1,-3)$

(ii) $(-9,0),(-8,6),(-1,-2)$ மற்றும் $(-6,-3)$

**தீர்வு:-**

(i) **தரவு,** $(x_1, y_1) = (-9,-2)$, $(x_2, y_2) = (-8,-4)$; $(x_3, y_3) = (1,-3)$; $(x_4, y_4) = (2,\ 2)$

நாற்கரத்தின் பரப்பு $= \frac{1}{2}\begin{Bmatrix} x_1 & x_2 & x_3 & x_4 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_4 & y_1 \end{Bmatrix}$

$= \frac{1}{2}\begin{Bmatrix} -9 & -8 & 1 & 2 & -9 \\ -2 & -4 & -3 & 2 & -2 \end{Bmatrix}$

$= \frac{1}{2}(36 + 24 + 2 - 4 - 16 + 4 + 6 + 18)$

$= \frac{1}{2}(90 - 20)$

$= \frac{70}{2}$

$= 35$ சதுர அலகுகள்



**(ii)** $(-9,0),(-8,6),(-1,-2)$ மற்றும் $(-6,-3)$

**தரவு,**

$(x_1,y_1)=(-9,0)$

$(x_2,y_2)=(-6,-3)$

$(x_3,y_3)=(-1,-2)$

$(x_4,y_4)=(-8,6)$




நாற்கரத்தின் பரப்பு $=\frac{1}{2}\begin{Bmatrix} x_1 & x_2 & x_3 & x_4 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_4 & y_1 \end{Bmatrix}$

$=\frac{1}{2}\begin{Bmatrix} -9 & -6 & -1 & -8 & -9 \\ 0 & -3 & -2 & 6 & 0 \end{Bmatrix}$

$=\frac{1}{2}(27+12-6+0+0-3-16+54)$

$=\frac{1}{2}(93-25)$

$=\frac{68}{2}$

$=34$ சதுர அலகுகள்

6) $(-4,-2),(-3,k),(3,-2)$ மற்றும் $(2,3)$ ஆகிய புள்ளிகளை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பு 28 ச.அலகுகள் எனில், $k$ - யின் மதிப்பு காண்க. [PTA-5, S-20]

**தீர்வு:-**

**தரவு,** $(x_1,y_1)=(-4,-2)$, $(x_2,y_2)=(-3,k)$;

$(x_3,y_3)=(3,-2)$; $(x_4,y_4)=(2,3)$

நாற்கரத்தின் பரப்பு $=28$ ச.அலகுகள்

நாற்கரத்தின் பரப்பு $=\frac{1}{2}\begin{Bmatrix} x_1 & x_2 & x_3 & x_4 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_4 & y_1 \end{Bmatrix}$

$28=\frac{1}{2}\begin{Bmatrix} -4 & -3 & 3 & 2 & -4 \\ -2 & k & -2 & 3 & -2 \end{Bmatrix}$

$2 \times 28 = -4k+6+9-4-6-3k+4+12$

$56=-7k+31-10$

$56=-7k+21$

$7k=21-56$

$7k=-35$

$k=\frac{-35}{7}$

$k=-5$

9 நாற்கர வடிவ நீச்சல் குளத்தின் கான்கிரீட் உள்முற்றமானது படத்தில் காட்டியுள்ளபடி அமைக்கப்பட்டுள்ளது எனில், உள்முற்றத்தின் பரப்பு காண்க.




**தீர்வு:-**

**தரவு,**

$(x_1,y_1)=A(-4,-8)$

$(x_2,y_2)=B(8,-4)$

$(x_3,y_3)=C(6,10)$

$(x_4,y_4)=D(-10,6)$

நாற்கரம் ABCD -ன் பரப்பு $=\frac{1}{2}\begin{Bmatrix} x_1 & x_2 & x_3 & x_4 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_4 & y_1 \end{Bmatrix}$

$=\frac{1}{2}\begin{Bmatrix} -4 & 8 & 6 & -10 & -4 \\ -8 & -4 & 10 & 6 & -8 \end{Bmatrix}$

$=\frac{1}{2}(16+80+36+80+64+24+100+24)$

$=\frac{424}{2}$

$=212$ சதுர அலகுகள்.

**தரவு,**

$(x_1,y_1)=E(-3,-5)$

$(x_2,y_2)=F(6,-2)$

$(x_3,y_3)=G(3,7)$

$(x_4,y_4)=H(-6,4)$

நாற்கரம் EFGH -ன் பரப்பு $=\frac{1}{2}\begin{Bmatrix} x_1 & x_2 & x_3 & x_4 & x_1 \\ y_1 & y_2 & y_3 & y_4 & y_1 \end{Bmatrix}$

$=\frac{1}{2}\begin{Bmatrix} -3 & 6 & 3 & -6 & -3 \\ -5 & -2 & 7 & 4 & -5 \end{Bmatrix}$

$=\frac{1}{2}(6+42+12+30+30+6+42+12)$

$=\frac{180}{2}$

$=90$ சதுர அலகுகள்.

உள்முற்றத்தின் பரப்பு = நாற்கரம் ABCD -ன் பரப்பு – நாற்கரம் EFGH -ன் பரப்பு

$=212-90$

$=122$ சதுர அலகுகள்.

## பயிற்சி 5.2

9) கொடுக்கப்பட்ட புள்ளிகள் செங்கோண முக்கோணத்தை அமைக்கும் எனக் காட்டுக. மேலும் பிதாகரஸ் தேற்றத்தை நிறைவு செய்யுமா என ஆராய்க.

(i) $A(1,-4), B(2,-3)$ மற்றும் $C(4,-7)$

$(x_1, y_1) = A(1,-4)$

$(x_2, y_2) = B(2,-3)$ $(x_3, y_3) = C(4,-7)$




WKT, சாய்வு,

$$m = \frac{y_2 - y_1}{x_2 - x_1}$$

